KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Anantham oorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 13 June 2025 இதழ்:- 23

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## புதிய கூட்டுக்கள் புனிதமானவையா?





## டக்ளஸ் தோழரும்(?) தேசியவாதிகளும்!

## அரங்கு நிறைந்த மக்களுடன் ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025"





THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers



**Siva Kandiah**

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

**Piravien Siva**

Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



22 Years Real Estate Experience

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated

**Bus: 416-289-3333**

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Warden/Finch**



Scarborough $424,900

2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

**Kennedy / Hwy 401**



Scarborough $429,900

1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


**Markham / Sheppard Ave**



Scarborough $479,000

1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse


**McCowan / Ellesmere**



Scarborough $599,000

2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


**Mccowan & Hwy 401**



Scarborough $549,900

2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


**Kennedy / 401**



Scarborough $538,000

2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

**Simcoe St / 401**



Oshawa $575,900

3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft


**Grandview Dr. / Bloor**



Oshawa $649,800

2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated


**9TH LINE / HIGHWAY 7**



Markham $1,100,000

4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

**Dixie/ Glenanna**



Pickering $799,000

3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities


**Audley Rd & Rossland Rd E**



Ajax $799,000

3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse

**Markham & Ellesmere**



Scarborough $1,050,000

3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

**Morningside/Mcnicol**



Scarborough $1,099,900

3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout


**401/Morningside**



Scarborough $1,249,000

4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407


**10th Line/ Hoover Park Dr**



Stouffville $1,499,999

4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

**9th Line/Hoover Park**



Stouffville $999,000

4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழரசுக்கட்சி வசம் யாழ். மாநகரின் ஆட்சி!



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் விவேகானந்தராஜா மதிவதனி யாழ் மாநகர சபையின் முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ் மாநகர சபையின் முதல்வரை தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்றைய தினம் (13) யாழ் மாநகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

45 உறுப்பினர்களை கொண்ட யாழ் மாநகர சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 12 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இதன்படி இலங்கை தமிழரசுக் கட்சியின் முதல்வர் வேட்பாளராக விவேகானந்தராசா மதிவதனியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முதல்வர் வேட்பாளராக கனகையா ஸ்ரீகிருஸ்ணகுமார் ஆகியோர் போட்டியிட்டனர்.

வெளிப்படையான வாக்கெடுப்பில் விவேகானந்தராஜா மதிவதனிக்கு 19 வாக்குகளும் கனகையா ஸ்ரீகிருஷ்ணகுமாருக்கு 16 வாக்குகளும் கிடைத்தன. தேசிய மக்கள் சக்தியின் 10 உறுப்பினர்களும் நடுநிலை வகித்தனர்.

இந்நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முதல்வர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட விவேகானந்தராஜா மதிவதனி வெற்றி பெற்றதுடன், பிரதி முதல்வர் பதவிக்கு இம்மானுவேல் தயாளன் தெரிவானார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முதல்வர் வேட்பாளருக்கு ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்திஇ ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன ஆதரித்து வாக்களித்து வெற்றி பெறச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய விமான விபத்தில் பலியான கனடிய பல் வைத்தியர்



இந்தியாவிற்கான பயணமொன்றை முடித்துக் கொண்டு டொரோண்டோவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த தருணத்தில், கனடிய பெண் டாக்டர் நிராலி படேல் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

லண்டனை நோக்கிச் சென்ற ஏர் இந்தியா விமானம், இந்தியாவின் வட மேற்குப் பகுதியிலுள்ள குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள ஒரு கல்லூரி மாணவர் விடுதியில் மோதி விழுந்தது.

இதில் விமானத்தில் பயணம் செய்த 241 பேரும் உயிரிழந்தனர். தரையிலிருந்தவர்களில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

32 வயதான நிராலி படேல், எடோபிக்கோவ் பகுதியைச் சேர்ந்த பல் மருத்துவர் ஆவார். நிராலி அந்த Boeing 787-8 Dreamliner விமானத்தில் இருந்த ஒரே கனடா நாட்டவராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நிராலி இந்தியாவிற்கு நான்கு அல்லது ஐந்து நாட்கள் சென்றிருந்தார் எனவும் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த துயரச் சம்பவம் நடந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிராலியின் கணவர், தங்களது ஒரு வயது குழந்தையுடன் இந்தியா செல்ல விமானப் பயணத்தை ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகக தெரிவிக்கப்படுகின்றது.

நிராலி படேல், மிசிசாகாவில் உள்ள ஒரு பல் மருத்துவ நிலையத்தில் பணியாற்றி வந்தார். 2016 ஆம் ஆண்டு இந்தியாவில் பல் மருத்துவ பட்டம் பெற்று, 2019 ஆம் ஆண்டில் கனடாவில் வைத்திய அனுமதி பெற்றவர் என Royal College of Dental Surgeons of Ontario தெரிவித்துள்ளது.

# தமிழரசின் ஆதரவோடு நல்லூர் பிரதேச சபையைக் கைப்பற்றிய விக்கி அணி

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளராக தமிழ் மக்கள் கூட்டணியை சேர்த்த பத்மநாதன் மயூரன் ஏக மனதாகணதெரிவாகியுள்ளார்.

நல்லூர் பிரதச சபையின் தவிசாளர் தெரிவிக்கான கூட்டம் உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் 13 யூன் 2025 வெள்ளிக்கிழமை மதியம் நடைபெற்றது. அதன் போது தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் ப.மயூரன் பரிந்துரைக்கப்பட்ட நிலையில், வேறு யாரும் போட்டியிடாதமையால் மயூரன் தவிசாளராக ஏக மனதாக தெரிவானர்.

அதேவேளை ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் தவிசாளர் தெரிவில் சபையில் இருக்கவில்லை என சபையில் இருந்து வெளியேறியிருந்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியும், தமிழரசு கட்சியும் நல்லூர் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. இது பற்றியத் தெரிய வருவதாவது தமிழ் மக்கள் கூட்டணியும் தமிழரசு கட்சியும் உள்ளூராட்சி மன்ற சபைகளை அமைப்பது தொடர்பிலான ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர். இது தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சீ.வி. விக்னேஸ்வரனுக்கும் தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டதரணியுமான எம்.ஏ. சுமந்திரனுக்கும் இடையே விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில் இருகட்சிகளின் இணக்கப்பாடு தொடர்பிலான ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் விக்னேஸ்வரனின் கொழும்பு இல்லத்தில் வைத்து கையெழுத்திட்டுள்ளனர்.

யாழ். நல்லூர் பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சிக்கு 7 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணிக்கு 6 ஆசனங்களும் கிடைத்திருந்த நிலையில், முதல் இரு வருடங்களை தமிழ் மக்கள் கூட்டணிக்கும், இறுதி இரு வருடங்களை இலங்கை தமிழ் அரசு கட்சிக்கும் என்று ஆட்சி அதிகார ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# ஐ.நா.உயர்ஸ்தானிகரிடம் மாகாணசபைத் தேர்தலுக்கான அழுத்தத்தை தமிழ்க்கட்சிகள் கோர வேண்டும் - தயான்

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேக்ரிடத்தில் வடக்கு, கிழக்கு அரசியல், சிவில் தரப்பினர் கூட்டிணைந்து மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறே வலியுறுத்த வேண்டும் என்று இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயத்திலக வலியுறுத்தியுள்ளார்.

பொறுப்புக்கூறலை முன்னிலைப்படுத்திய கோரிக்கைளை முன்னெடுத்தால் ஆட்சியில் உள்ள அநுர அரசாங்கம் சுயாட்சிக் கோரிக்கைக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகருடைய விஜயம் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு தீர்மானித்திருப்பது முக்கியமானதொரு விடயமாகும். அவர் அவ்வாறு வருகை தருகின்ற போது உள்நாட்டில் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்துவது இயல்பானது.

அவ்வாறான நிலையில், வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல், சிவில் பிரமுகர்கள் இந்த விடயத்தினை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியது மிக முக்கியமானதொரு விடயமாகும். தற்போதைய நிலையில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் அதிகாரப்பகிர்வு தொடர்பாகவோ, பொறுப்புக் கூறல் தொடர்பாகவே எவ்விதமான கரிசனைகளையும் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தவில்லை.

அவ்வாறான நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தலே அதிகாரப் பகிர்வுக்கான ஆரம்பமாக இருக்கின்றது. அதனை எட்டு ஆண்டுகளாக நடத்தப்படாது இருக்கும் நிலையே காணப்படுகின்றது.

டில்லிக்கும், கொழும்புக்கும் இடையிலான உறவுகளால் மாகாண சபைகளுக்கான வலியுறுத்தல் பிரதமர் மோடியின் விஜயத்தில் காணமாலக்கப்பட்டுள்ளது. இது மிகப்பாரதூரமான விடயமாகும்.

ஆகவே ஐ.நா.உயர்ஸ்தானிகர் இலங்கைக்கு வருகின்ற சந்தர்ப்பத்தில் இந்த நாட்டில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசியல் ரீதியான தீர்வு தான் அடிப்படையாக இருக்கின்றது என்பதை உணர்த்துவதோடு மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவதற்கான அழுத்தங்களை பிரயோகிக்குமாறே கூட்டுக் கோரிக்கை முன்வைக்க வேண்டும்.



அதன் மூலமாகவே சுயாட்சி அதிகாரப் பகிர் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை நோக்கி நகரமுடியும். இதனை விடுத்து பொறுப்புக்கூறல் விடயத்தினை முன்வைக்கின்ற போது தென்னிலங்கையில் மீண்டும் தேசியவாத சக்திகள் தீவிரமாக தலையெடுக்கும். அவ்விதமான சூழல் ஏற்பட்டால் அரசங்கம் சுயாட்சி என்பதை உச்சரிக்க முடியாத அளவுக்கு கடுமையாக நடந்து கொள்வதற்கு வாய்ப்புக்களே அதிகமுள்ளன. காரணம் பாராளுமன்ற பெரும்பான்மை மற்றும் நிறைவேற்று அதிகாரம் அதற்கு காரணமாகின்றன. ஆகவே ஐ.நா.உயர்ஸ்தானிகரின் வருகையை எதிர்காலத்தை மையப் படுத்தி பயன்படுத்துவதற்கு தீர்மானிக்க வேண்டும் என்றார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# நாடு திரும்பும் அகதிகள் குறித்து அரசுடன் பேசினேன் சுமந்திரனுடன் இந்தியத் தூதுவர் சந்தோஷ் தெரிவிப்பு!



இந்தியாவிலிருந்து மீண்டும் நாடு திரும்பும் அகதிகளுக்கான இருப்பிட மற்றும் வாழ்வாதார வசதிகளை செய்துகொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து அரசாங்கத்துடன் கலந்துரையாடியிருப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 06 யூன் 2025 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது அண்மையில் தமிழகத்திலுள்ள அகதி முகாமிலிருந்து நாடு திரும்பிய 75 வயதுடைய நபரொருவர் பலாலி விமானநிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு. பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவம் குறித்து உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா விடம் சுமந்திரன் எடுத்துரைத்தார்.

அது மாத்திரமன்றி இந்திய அகதி முகாம்களில் உள்ள சுமார் 10.000 இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்புவதற்கு விண்ணப்பித்திருப்பது பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார். அதனை செவிமடுத்த உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா. மீண்டும் நாடு திரும்பும் அகதிகளுக்கு அவசியமான இருப்பிட மற்றும் வாழ்வாதார உதவிகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் எனவும். இது பற்றி அரசாங்கத்துடன் கலந்துரையாடியிருப்பதாகவும் தெரிவித்தார்.

# ஹரியை புகழ்ந்து பாராட்டிய பிரதமர்



கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கெரி ஆனந்த சங்கரியை அந்நாட்டு பிரதமர் மார்க் கார்னி புகழ்ந்து பாராட்டியுள்ளார். ஊடகவியலாளர் ஒருவர் கெரி ஆனந்தசங்கரி தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது பிரதமர் இவ்வாறு பாராட்டியுள்ளார்.



கனடாவின் புது பாதுகாப்பு அமைச்சர் கெரி ஆனந்த சங்கரி மிகவும் நேர்மையானவர் எனவும் தனது கடமையை சிறந்த முறையில் மேற்கொள்பவர் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆனந்த சங்கரி தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் எவ்வாறு நேர்மை தன்மையுடன் நடந்து கொள்வார் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

குறிப்பாக கெரி ஆனந்த சங்கரி தமிழீழ விடுதலை புலிகளுக்கு ஆதரவான வகையில் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தி இந்த கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதன் போது ஆனந்தசங்கரி மிகவும் நேர்மையான முறையில் தனது பதவியின் கடமைகளை செய்து வருவதாகவும் எந்த இடத்தில் எதனை செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த தெளிவுடன் செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனவே தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் எந்த ஒரு பிரச்சனையும் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனந்தங்கரி நீதி அமைச்சராக வும் நாட்டின் சட்டமா அதிபராகவும் கடமையாற்றிவர் எனவும் எனவே அவரது பதவி தொடர்பில் தெளிவுடன் செயற்பட்டு வருவதாக பிரதமர் தெரி வித்துள்ளார்.

# பிரமாண்டத்தில் மிகப் பிரமாண்டம்!






ரொறன்ரோவில் ஈழத்தமிழர்களால் பல்வேறு வடிவங்களில் அலங் கரிப்புகளில் விருந்துபசார மண்டபங்கள் 100 முதல் 1000 பேர் அமரக் கூடிய மண்டபங்கள் இருப்பது யாவரும் அறிந்ததே.

ஆனால் 630 Beck Cres-Ajax இல் - Durham Convention Centre என்ற பெயரில் 1500 பேர் ஒரே தடவையில் அமரக் கூடிய மிகப் பிரமாண்டமான மண்டபம் ஒன்று தற்கால நவீன வடிவமைப்புக்களுடன் 07 யூன் 2025 மாலை 3.00க்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத்துறையில் நீண்டகால அனுபவம் மிக்க ஜெயராஜன் (பிறின்ஸ்சஸ் ஜெயா) அசோகன், ரமேஸ், உட்பட இன்னும் ஒரு



சிலரின் கூட்டுமுயற்சியின் பலனே இந்த மண்டப மாகும்.

401 - E நெடுஞ்சாலையில் சென்று சேலத்தில் வெளி யேறி 5 நிமிடங்களில் மண் டபத்தைச் சென்றடையக் கூடிய இடமாகும்.

உங்கள் மகிழ்ச்சிகரமான நிகழ்வுகள் எதுவாகிலும் சிறப்பாக தரமான உணவு வகைகளுடன் பரிமாறிக் கொள்ள அந்த மண்டபத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம். தகவல்களுக்கு 416 584 3333

## அரசாங்கத்துடன் பேச வேண்டியது அவசியம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஒரு பிரதான எதிரியாகக் காண்பித்து. உள்ளூராட்சித் தேர்தலில் ஒப்பீட்டடிப்படையில் தமிழ்த்தேசிய கட்சிகள் வெற்றியை பெற்றிருந்தன எனினும் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் பெரியளவில் பின்னடைவை சந்திக்கவில்லை.

அவர்களைப் பொறுத்த வரையில் பூச்சியத்தில் இருந்தவர்கள். பெரியளவில் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். எனவே தேசியமக்கள் சக்தி வடக்கு. கிழக்கில் தோல்வியடையவில்லை. தமிழ் கட்சிகள் இந்த விடயத்தை எந்தளவு புரிந்து கொண்டிருக்கின்றன அல்லது புரிந்து கொள்ள முயற்சிக்கின்றன என்பது கேள்வியாகும்.

நல்லாட்சி அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. அந்த அடிப்படையில் சில விடயங்களில் ஏற்படும் என்பதான நம்பிக்கை விதைக்கப்பட்டது. ஆனால், அவைகள் எதிர்பார்த்தவாறு இடம் பெறவில்லை.

பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்றியதைத் தொடர்ந்து அரசாங்க எதிர்ப்பு அடிப்படையில் விடயங்கள் மீண்டும் அணுகப்பட்டன.

ரணில் எதிர்பாராதவிதமாக அதிகாரத்தை பொறுப்பேற்ற பின்னணியில் மீண்டும் அரசாங்கத்துடன் பேசுதல் என்னுமடிப்படையில் விடயங்கள் அணுகப்பட்டன. ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்தை கைப்பற்றிய பின்னணியில் மீண்டும் அரசாங்க எதிர்ப்புப் பிரசாரங்களை தமிழ் கட்சிகள் கூட்டாக கையிலெடுத்திருக்கின்றன.

ஆனால், இங்குள்ள பிரச்சனை என்னவென்றால், தமிழ் கட்சிகள் என்ன தான் சுலோகங்களை முன் வைத்தாலும். தங்களுக்குள் உத்தமர்கள் யார் என்று சண்டையிட்டுக் கொண்டாலும் கூட. இறுதியில் பேச்சுவார்த்தை மேசைக்கு சென்று தான் ஆக வேண்டும்.

அதனை விட்டால் அரசியலை கையாள்வதற்கு வேறு வழியில்லை. இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் குறிப்பாக இலங்கை தமிழ் அரசு கட்சி கரிசனை கொள்ள வேண்டும். இந்தியா விலிருந்து நாடு திரும்பிய 70 வயதை கடந்த ஒருவர். பலாலி விமான நிலையத்தில் வைத்து. கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

பல வருடங்களுக்கு முன்னர் அவர் நாட்டை விட்டு வெளியேறிய விடயத்தை ஒரு குற்றமாக முன்வைத்தே அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறான விடயங்களில் கொள்கை சார்ந்த இணக்கப்பாடு அவசியம். அரசாங்கத்துடன் இது தொடர்பில் பேச வேண்டும். கைது இடம்பெற்ற பின்னர் இது தவறு என்று கூறுவதற்கு கட்சிகள் தேவையில்லை. இவ்வாறான விடயங்கள் எதிர் காலத்தில் இடம்பெறுவதை தடுக்க அரசாங்கத்துடன் முறையான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.

ஈழத் தமிழ் மக்களுக்கு தனியான ஒரு தேசிய இயக்கம் தேவையென்னும் அடிப்படையில் இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து. தனித்துவமான அரசியல் தொடர்பில் பேசினாலும் கூட ஆட்சியாளர்களோடு பேசுவதையே பிரதான அரசியல் அணுகுமுறையாக கைக்கொள்ளப்பட்டது.

எனவே விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால், தேசிய மக்கள் சக்தி பலமானதோர் அதிகார நிலையில் இருக்கின்றது. இன்றைய சூழலில் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேச வேண்டியது அவசியம். அதன் மூலம் தான், பிரச்சனைகளுக்கான தற்காலிக தீர்வுகளையாவது பெற முடியும். இந்தியா விலிருந்து நாடு திரும்ப விருப்புவாகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேசி, கொள்கை சார்ந்து இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது அவசியம்.

# தமிழ்த்தேசியக் கட்சிகளின் நகர்வுகள் என்ன? சுமந்திரனிடம் கேட்டறிந்தார் இந்தியத் தூதுவர்!



வட கிழக்கு மாகாணங்களில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தாம் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொது செயலாளர் எம்.ஏ.சுமந்திரனிடம் தெரிவித்துள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, தமிழ்த்தேசிய கட்சிகளின் சமகால அரசியல் நகர்வுகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு 06 யூன் 2025 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது வட, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிலைவரம் என்பன தொடர்பில் கேட்டறிந்த உயர்ஸ்தானிகர், தாம் அம்மாகாணங்களில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அதுமாத்திரமன்றி அவ்வாறான திட்டங்கள் குறித்த முன்மொழிவுகள் இருப்பின் அதனைத் தம்மிடம் வழங்குமாறும், அதுபற்றி அரசாங்கத்துடன் பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னரான தமிழ்த்தேசிய கட்சிகளின் அரசியல் நகர்வுகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய உயர்ஸ்தானிகருக்குப் பதிலளித்த சுமந்திரன், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் அதிகூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற கோட்பாட்டைத் தாம் முன்வைத்ததாகவும், இருப்பினும் அதற்கு முரணாக இரு கட்சிகள் கூட்டணி அமைத்து தம்வசமே அதிக ஆசனங்கள் இருப்பது போல் காண்பித்துக் கொள்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு சகல தமிழ்த்தேசிய கட்சிகளும் ஒரே கொள்கையையே கொண்டிருப்பதாகவும், அணுகுமுறைகளே மாறுபட்டவையாகக் காணப்படுவதாகவும் தெரிவித்த சுமந்திரன், இருப்பினும் அதனை கஜேந்திரகுமார் மறுப்பதற்கான காரணம் தனக்குத் தெரியவில்லை எனவும் விசனம் வெளியிட்டார்.

அதேவேளை புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில் 2015 – 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தாம் தயாரித்த அரசியலமைப்பு வரைபு சிறந்த பல கூறுகளைக் கொண்டிருப்பதாக உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் எடுத்துரைத்த சுமந்திரன், அதிலுள்ள குறைபாடுகள் பற்றி சகலரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி திருத்தங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, அதனை முற்றாக நிராகரிக்க வேண்டும் என கஜேந்திரகுமார் கூறி வருவது ஏற்புடையதன்று என்றும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் எங்கள் மீது அவதூறு பரப்பியவர்கள் தற்போது எங்களை “லவ்வராக” பார்க்கின்றனர்



தேசிய மக்கள் சக்தியினை யாழ்ப்பாணத்தில் பல அரசியல்வாதிகள் லவ்வாக பார்க்கின்றனர் என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டவரிடம் , யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு யாருக்கு என ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக தேசிய மக்கள் சக்தி தற்போது காணப்படுகிறது. அதனால் பல்வேறு தரப்பினரும் எம்மை அணுகி பேச்சுக்களை நடாத்தி வருகின்றனர்.

தற்போது பலரும் எம்முடன் அன்பாக பேசுகின்றனர். பலர் எம்மை லவ்வாக பார்க்கின்றனர். ஆனால் இவர்கள் அனைவரும் தேர்தல் காலத்தில் எங்களுக்கு எதிராக தேசிய மக்கள் சக்திக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள். குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு எதிராகவும் மாநகர சபை உறுப்பினர் கபிலனுக்கு எதிராகவும் பாரிய அவதூறுகளை கட்டவிழ்த்து விட்டவர்கள். அவர்களை தூற்றியவர்கள் இன்று வந்து எங்களுக்கு ஆதரவு தாருங்கள் என கேட்டு நிற்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் எந்தவொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் நாங்கள் இடையூறாக இருக்க மாட்டோம். அதேநேரம் கடந்த காலங்களில் எங்கள் மீது அவதூறுகளை பரப்பிய எந்தவொரு அணிக்கும் நாங்கள் ஆதரவு தர மாட்டோம்

அதேநேரம் ஒரு சில சபைகளில் நாங்களும் ஆட்சி அமைப்பதற்கான சூழல்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகிறோம் என மேலும் தெரிவித்தார்.

# பிலிப்பைன்ஸ் பிரஜையைத் திருமணம் செய்யும் இலங்கையர்களுக்கு 5 வருட வதிவிட விசா என அரசு அறிவிப்பு!



பிலிப்பைன்ஸ் பிரஜையை திருமணம் செய்யும் இலங்கையர்களுக்கு 5 வருட தற்காலிக வதிவிட வீசாக்களை (TRV) வழங்கும் நடவடிக்கையை அந்நாட்டு அரசாங்கம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் பிலிப்பைன்ஸில் வசிக்கும் இலங்கையர்களுக்கு ஏற்பட்ட கவலைகளில் ஒன்று நிவர்த்தி செய்யப்படுகிறது.

இதற்கு முன்னர் இலங்கையர்களுக்கு வதிவிட வீசாக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டன, மேலும் அதை அடிக்கடி புதுப்பிக்க வேண்டிய தேவை இருந்தது.

இந்த செயல்முறையால் பெரும்பாலும் அதிகாரிகளால் கடவுச்சீட்டுக்களை நீண்ட நாள் வைத்திருக்க வழி வகுத்தது. குறிப்பாக வணிகம் மற்றும் பிற அவசர விடயங்களுக்காக பயணிக்க வேண்டிய நபர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தியது. பல ஆண்டுகளாக வதிவிட வீசா செல்லுபடியாகும் காலத்தை நீடிக்குமாறு இலங்கையர்கள் வலியுறுத்தி வந்தனர். அவர்களின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக, பிலிப்பைன்ஸிற்கான இலங்கை தூதுவராக சானக ஹர்ஷ தல்பஹேவா பதவியேற்றதும், தனது பதவிக் காலத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்வு காண்பதாக உறுதியளித்தார்.

இது சம்பந்தமாக, பிலிப்பைன்ஸின் துணை ஜனாதிபதி வெளிவிவகாரச் செயலாளர் (அமைச்சர்) மற்றும் பிற செயலாளர்கள் (அமைச்சர்கள்), துணைச் செயலாளர்கள் (துணை அமைச்சர்கள்), பல்வேறு துறைகள் (அமைச்சுகள்) மற்றும் அரச நிறுவனங்களில் தொடர்புடைய அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் தூதுவர் உயர் மட்ட இராஜதந்திர கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதன் பயனாக பிலிப்பைன்ஸ் அரசாங்கம் வதிவிட வீசா செல்லுபடியாகும் காலத்தை இரண்டு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக நீடித்துள்ளது. இது பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிம்மதியை அளித்துள்ளது. இதன் மூலம் இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான வலுவான மற்றும் வளர்ந்து வரும் உறவுகளுக்கு சான்றாக அமைகின்றது.

# உருக்குலைந்த விமானத்தில் இருந்து நடந்து வந்த நபர் உயிர் தப்பிய அதிசயம்



அகமதாபாத் விமான விபத்தில் ஒரு பயணி மட்டும் உயிர் தப்பியுள்ளார். குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஏர் இந்தியா போயிங் 787 ட்ரீம்லைனர் விமானம் புறப்படுவதற்குத் தயாராக இருந்தது. இந்த விமானம் அகமதாபாத்திலிருந்து இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள கேட்விக் விமான நிலையத்திற்குப் புறப்பட இருந்தது. விமானத்தில் 230 பயணிகள், 10 கேபின் பணியாளர்கள் மற்றும் 2 விமானிகள் என 242 பேர் மொத்தமாக இருந்தனர். விமானம் மதியம் 1.38 மணியளவில் விமான நிலைய ஓடுதளத்திலிருந்து கிளம்பியது. விமானம் கேப்டன் சுமீத் சபர்வால் தலைமையில் முதல் அதிகாரி கிளைவ் குந்தர் முன்னிலையில் விமானம் சீராக ஓடுதளத்தில் ஓடியது.

வழக்கம் போல் எவ்வித இடையூறுமின்றி டேக் ஆஃப் ஆன விமானம் புறப்பட்ட 5ஆவது நிமிடத்தில் தடுமாற ஆரம்பித்தது. சுமார் 825-வது அடியை எட்டிய போது விமானம் அதற்கு மேல் செல்ல முடியாமல் திணறியது. ஆபத்தை உணர்ந்த கேப்டன் சுமீத் சபர்வால் ஆபத்துக் காலத்தில் விடுக்கப்படும் மே டே' சமிஞ்ஞையை விமானக் கட்டுப்பாட்டு அறைக்கு 3 முறை அறிவித்தார். ஆனால் அதற்குள் விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்து தரையிறங்க ஆரம்பித்தது.

விமான நிலையத்திலிருந்து சற்றுத் தூரத்தில் உள்ள மேகனி நகர் பகுதியில் விமானம் விழுந்து சம்பவ இடத்திலேயே வெடித்துச் சிதறியது. விண்ணை நோக்கித் தீப்பிழம்புகள் எழுந்த நிலையில்இ அடர்த்தியான கரும்புகை அப்பகுதி முழுவதும் பரவியது. சம்பவம் நிகழ்ந்த சிறிது நேரத்திற்குள் சுமார் 20க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்கள் அப்பகுதிக்கு விரைந்தன. அப்பகுதி மக்களும் உடனடியாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

பலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டாலும் ஒரு சிலர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இந்த விமானத்தில் இதில் 169 பேர் இந்தியர்கள், 53 பேர் பிரிட்டன் நாட்டவர்கள், 7 பேர் போர்ச்சுகல் நாட்டவர்கள் மற்றும் கனடா நாட்டவர் ஒருவர் என ஏர் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில்இந்த கோர விபத்தில் இருந்து ஒரு பயணி மட்டும் உயிரோடு தப்பியுள்ளார். அதன்படி இருக்கை எண் 11 ஏவில் பயணம் செய்த விஸ்வாஷ் குமார் என்பவர் உயிர் தப்பியுள்ளதாக அகமதாபாத் பொலிஸ் ஆணையர் ஜி.எஸ்.மாலிக் தகவல் தெரிவித்துள்ளார்.

# ஏர் இந்தியா விமான விபத்து! இது வரையான அண்மைய தகவல்கள்!

அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்குச் சென்ற ஏர் இந்தியா விமானமான யுஜ-171, சர்தார் வல்லபாய் படேல் அகமதாபாத் விமான நிலையத்தில் 12 யூன் 2025 வியாழக்கிழமை புறப்பட்ட சிறுதி நேரத்தில் விபத்துக்குள்ளானது.

இந்த விமானத்தில் மொத்தம் 230 பயணிகள் மற்றும் 12 பணியாளர்கள் இருந்ததாக குஜராத் மாநில காவல்துறை கட்டுப்பாட்டு அறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களில், 169 பேர் இந்தியர்கள், 53 பேர் பிரிட்டிஷ் நாட்டினர், 1 கனேடிய நாட்டினர் மற்றும் 7 பேர் போர்த்துகீசிய நாட்டினர். ஏர் இந்தியா விமானம் ஒரு போயிங் 727 இரட்டை ஜெட் விமானமாகும்.

காவல் கட்டுப்பாட்டு அறையின் தகவலின்படி, ஏர் இந்தியா விமானம் யுஜ 171 லண்டனுக்கு புறப்பட்ட சிறுது நேரத்திலேயே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அகமதாபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையம் (SVPIA) தற்போது செயல்படவில்லை.

அனைத்து விமான நடவடிக்கைகளும் மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். விமான நிலையத்திற்கு அருகிலுள்ள மேகனிநகர் பகுதிக்கு அருகில் இந்த சம்பவம் இன்று பிற்பகல் நிகழ்ந்துள்ளது.



விபத்து நடந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட காட்சிகளில், அவசர கால மீட்புக் குழுக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்த போது, வானத்தில் அடர்ந்த கரும்புகை கிளம்பியது தெரிந்தது. தீயைக் கட்டுப்படுத்த குறைந்தது ஏழு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த விமானத்தை கேப்டன் சுமீத் சபர்வால் தலைமை தாங்கினார். அவர் 8,200 மணிநேர பறக்கும் அனுபவமுள்ள ஒரு லைன் பயிற்சி கேப்டன் (LTC) ஆவார். அவருக்கு 1,100 மணி நேர பறக்கும் அனுபவமுள்ள முதல் அதிகாரி கிளைவ் குந்தர் உதவினார்.

விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு மையத்தின் (ATC) தகவலின்படி, விமானம் ஓடுபாதை 23 இல் இருந்து பிற்பகல் 13:39 IST (08:09 UTC) மணிக்கு புறப்பட்டது.

புறப்பட்ட சில நிமிடங்களுக்குப் பிறகு, விமானம் விமான நிலைய சுற்றளவுக்கு வெளியே விபத்துக்குள்ளானது. குஜராத் முதல்வர் பூ பேந்திர படேல், விபத்து குறித்து மிகவும் வருத்தமடைந்ததாகவும், மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் உறுதிப்படுத்தினார்.

ஏர் இந்தியா நிறுவனம் வெளியிட்ட முக்கியத் தகவல்கள் வருமாறு குஜராத்தின் ஆமதாபாத்தில் இருந்து புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் இன்று விபத்துக்குள்ளானது. இது தொடர்பாக ஏர் இந்தியா விரிவான விவரங்களை வெளியிட்டுள்ளது.

ஆமதாபாத்தில் இருந்து லண்டனின் கேட்விக் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்ட யுஜ171 விமானம் டேக் ஆஃப் ஆன பிறகு விபத்துக்குள்ளானது என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

போயிங் 787-8 ரக விமானம் மதியம் 1:38 மணிக்கு லண்டனை நோக்கிப் புறப்பட்டது. பயணிகள் மற்றும் விமானப் பணிக்குழுவினர் உள்பட அதில் 242 பேர் இருந்தனர். இதில் 169 பேர் இந்தியர்கள், 53 பேர் பிரிட்டனை சேர்ந்தவர்கள், ஒருவர் கனடாவை சேர்ந்தவர், 7 பேர் போர்ச்சுகீசியர்கள். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்' என ஏர் இந்தியா குறிப்பிட்டுள்ளது.

# இறையடி இணைந்தார்



## திருமதி ஞானபூரணி விவேகானந்தன்

மலர்வு:- 25 மே 1936 - உதிர்வு:- 09 யூன் 2025

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஞான பூசணி விவேகானந்தன் அவர்கள் 09-06-2025ம் திகதியன்று கொழும்பில் காலமானார். இவர் காலஞ் சென்ற திருதிருமதி இராமலிங்கம் சுந்தரம் பிள்ளை பாக்கியம் சுந்தரம்பிள்ளையின் மகளும், திரு திருமதி செல்லப்பா, முத்துப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னார் காலம்சென்ற C.V.விவேகானந்தனின (சட்டத்தரணி) மனைவியும் மற்றும் புவிதரன் (ஜனாதிபதி சட்டத்தரணி Colombo), விவேதரன் (Norway), இந்துமதி (Canada), வளர்மதி (Norway), கோமதி (Canada), சசிதரன் (சட்டத்தரணி Canada- Sasitharan Law Professional Corporation) ஆகியோரின் தாயாரும் ,

சந்திரகி (சட்டத்தரணி Colombo), மீரா (Norway), கணேசமூர்த்தி (Canada), செல்வசிறீ (Norway), திலீபன் (Canada), இராஜபாலினி (சட்டத்தரணி Canada- Sasitharan Law Professional Corporation) ஆகியோரின் மாமியாரும்

வளவன், கல்கி, ஹாரணி, விதுஷன், நிவேதிதா, கீர்த்திகா, சந்தியா, சரணியா, திவ்யன், நித்தியன், அபிராமி, வர்ஷினி ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னார் காலஞ் சென்ற சுந்தரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரியும் , சாந்தநாயகி, காலஞ் சென்ற சரவணமுத்து, காலஞ் சென்ற செல்வரட்ணம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (14-06-2025) காலை 10.00 மணி முதல் - மாலை 7.00 மணி வரை No:4 Innerfairline Road தெகிவளையில் (Srilanka) பார்வைக்காக வைக்கப்பட்டு மறுநாள் 15-06-2025ம் திகதி காலை 8.00 மணிஅளவில் கிரியைகள் ஆரம்பமாகி General Cemetery - Mount Laviniaவில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

விவேகானந்தன் புவிதரன்(மகன்)
94 77 732 1650

விவேகானந்தன் விவேதரன்(மகன்)
47 928 91063

இந்துமதி கணேஷமூர்த்தி(மகள்)
647-244-4315

வளர்மதி செல்வசிறி (மகள்)
47 917 68660

கோமதி திலீபன்(மகள்)
306-351-4782

விவேகானந்தன் சசிதரன்(மகன்)
647-248-4469

அன்புத் தாயாரின் இழப்பினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஈழநாடு குடும்பத்தின் சார்பிலும் வாசகர்கள் சார்பிலும் அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# அரசியல் கைதிகள் விடுதலைக்கு அர்ச்சுனா தடையானவரா?

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் முறையற்ற கருத்துக்கள், வடக்கு காணி விடுவிப்பு மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிப்பு ஆகியவற்றுக்கு தடையாக அமையலாம் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தனியார் பத்திரிக்கை ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அண்மையில் விடுவிக்கப்பட்ட 323 துறைமுக கொள்கலன்களில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆயுதங்கள் இருந்ததாக உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்திருந்தார். சபையின் சிறப்புரிமையில் இருந்துக் கொண்டு அர்ச்சுனா தொடர்ச்சியாக குறிப்பிடுவது தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் அதிருப்திக்குரியன. அர்ச்சுனா இராமநாதனின் கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் வடக்குக்கும், தெற்குக்கும் இடையில் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையில் உள்ளன.



பிரபாகரன் தமது தேசிய தலைவர் என்று குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார். இது அரசியலமைப்புக்கு முற்றிலும் விரோதமானது. அர்ச்சுனாவின் கருத்துக்களை அரசாங்கம் அலட்சியப்படுத்துகிறது. ஆனால் இது இனங்களுக்கிடையில் சந்தேகத்தையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தும்.

323 கொள்கலன்களில் பிரபாகரின் ஆயுதங்கள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், தமிழ் டயஸ் போராக்களிடமிருந்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நிதி பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் உண்மைத்தன்மை என்னவென்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். நாடாளுமன்ற சிறப்புரிமையில் இருந்துக் கொண்டு விரும்பிய அனைத்தையும் குறிப்பிட முடியாது. அர்ச்சுனா குறிப்பிட்டுள்ள விடயங்கள் முன்னாள் போராளிகளுக்கும் உத்வேகமளிக்கும் வகையில் அமையும்.


நகத்தால் கிள்ளியெறிய வேண்டியதை கோடரியால் வெட்டி வீழ்த்தும் நிலையை அரசாங்கம் உருவாக்க கூடாது என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஒரு முறை கூட புலிகளின் ஆயுதங்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வரவில்லை



விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுக்கு சொந்தமான ஆயுதங்கள் புலம்பெயர் அமைப்புக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுவதை முழுமையாக நிரா கரிக்கிறேன். 30 வருடகாலமாக விடுதலை புலிகள் இயக்கத்துடனான போர் நிலவியது. ஒருமுறை கூட கொழும்பு துறைமுகத்தின் ஊடாக கொள்கலன்களில் ஆயுதங்கள் கொண்டு வரப்படவில்லை. பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்துக் கொண்டு பொய்யுரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என சுங்கத் திணைக்களத்தின் மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களில் ஆயுதங்கள் போதைப்பொருட்கள், தங்கம் ஏதும் இருக்கவில்லை. பிளாஸ்டிக், மோட்டார் வாகன உதிரிபாகங்கள் மற்றும் கைத்தொழில் மூலப்பொருட்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன. 60 சதவீதமான கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்படுகின்றன. இதுவொன்றும் புதிதல்ல, அனைத்து கொள்கலன்களையும் விடுவிக்க வேண்டுமாயின் கொள்கலன் விடுவிப்புக்கு மூன்று மாதங்களேனும் செல்லும் எனவும் குறிப்பிட்டார். சுங்கத்துக்குள் கடந்த ஜனவரி மாதமளவில் கொள்கலன் நெரிசல் ஏற்பட்டதை தொடர்ந்து கண்காணிப்பு குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அவதானமற்ற நிலையில் உள்ள கொள்கலன்களை பரிசோதனையின்றி விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து அவதானமற்ற நிலையில் உள்ள கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்படுகிறது என்றார்.

வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300

Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832

Email: info@creditrecoverycanada.ca



# புதிய கூட்டுக்கள் புனிதமானவையா?

கட்சி மைய அரசியலில் உலகம் முழுவதுமே புனிதமான கூட்டு என்று எதுவும் கிடையாது. இருப்பதில் பரவாயில்லை என்று கூறத்தக்க பொருத்தமான கூட்டுக்கள்தான் உண்டு. இப்பொழுது கஜேந்திரக்குமார் உருவாக்கி வைத்திருக்கும் கூட்டும் அப்படித் தான். அதுவும் ஒரு சமயோசிதக் கூட்டுத்தான். தந்திரோபாயக் கூட்டுத் தான். எனினும், தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் பொது எதிரிக்கு எதிராக ஆகக்கூடிய பட்ஷம் ஒரு தேசமாகத் திரள்வது என்ற அடிப்படையில் அந்த கூட்டுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

தமிழ் மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை கடந்து வந்த மக்கள் அதேசமயம் ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரும் நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்கள். எனவே நீதிக்கான போராட்டத்தில் யாரைப் பிரதான குற்றவாளியாகக் காணப் போகிறோம் யாருக்கு எதிராக அணி திரளப் போகிறோம் என்பதில் தமிழ் மக்களிடம் மிகத் தெளிவான சிந்தனை இருக்க வேண்டும். அதாவது பொது எதிரிக்கு எதிராக ஒன்று திரள்வது.எங்களுக்குள் ஒருவர் மற்றவரை குற்றஞ்சாட்டி நாங்கள் பல துண்டுகளாகச் சிதறிப் போவதா? அல்லது பொது எதிரிக்கு எதிராக ஒன்று திரள்வதா? என்ற கேள்விக்கு இங்கு விடை முக்கியம்.

இந்த அடிப்படையில் பார்த்தால் கஜேந்திரக்குமார் டிரிஎன்ஏயோடு கூட்டுக்குப் போவது என்று முடிவெடுத்தது ஒரு திருப்பகரமான மாற்றம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தியாகி–துரோகி வாய்ப்பாட்டுக்கு வெளியே அந்தக் கூட்டு உருவாகியிருக்கிறது. அப்படிப் பார்த்தால் கடந்த 15 ஆண்டு கால வாய்ப்பாட்டுக்கு வெளியே முன்னணி வந்திருக்கிறது. அது இரண்டு தரப்புக்கும் மெய்யான ஒரு பண்புரு மாற்றமாக இருந்தால் கூட்டு நிலைக்கும்.

அந்தக் கூட்டின் மூலம் அவர்கள் பின்வரும் நன்மைகளை அடைய முயற்சிக்கலாம். முதலாவதாக, பொது எதிரிக்கு எதிராக ஒப்பீட்டளவில் பெரிய கூட்டு. இரண்டாவதாக, உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்கான அதிகரித்த வாய்ப்புகளை உருவாக்கலாம். மூன்றாவதாக, தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியைத் தனிமைப்படுத்தலாம். நான்காவதாக, மாகாண சபைத் தேர்தலை எதிர் கொள்வதற்கு ஒரு பலமான முன்னணியை உருவாக்கலாம். ஐந்தாவதாக, கஜேந்திரக்குமாரின் தலைமைத்துவத்தைப் பலப்படுத்தலாம்.




டிரிஎன்ஏயைப் பொறுத்தவரை அவர்கள் யாரோடாவது கூட்டுச் சேர வேண்டும். தனியாக நின்று பிடிக்க முடியாது. தமிழரசுக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்தால் மாகாண சபையிலும் அதற்குப் பின் வரக்கூடிய தேர்தல்களிலும் அதிகரித்த வெற்றி வாய்ப்புகள் அவர்களுக்கு இருக்கக்கூடும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அவ்வாறான வெற்றி வாய்ப்புகளை இனிமேல் தான் நிரூபிக்க வேண்டும். ஆனால் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பது தொடர்பாக தமிழரசுக் கட்சியோடு அவர்கள் முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளில் திருப்தியான பெறுபேறுகள் இல்லாத ஒரு பின்னணிக்குள் அவர்கள் முன்னணியை நோக்கி வந்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சி தன்னை முதன்மை கட்சியாகவும் பெரிய கட்சியாகவும் கருதி, தனது மேலாண்மையை வலியுறுத்த முற்பட்டதன் விளைவு இது.

புதிய கூட்டை எப்படி உளவியல் ரீதியாகவும் நடைமுறையிலும் பலவீனப்படுத்தலாம் என்று சிந்தித்து சுமந்திரன் அணி திட்டமிட்டு வேலை செய்கின்றது.சுமந்திரன் அணி இந்தக் கூட்டைக் கண்டு பதட்டமடைகிறது. எதிர்காலத்தில் தலைமைத்துவம் முன்னணியிடம் சென்று விடக் கூடாது என்ற பயமும் அதில் உண்டு. எனவே இந்தக் கூட்டை உடைப்பதற்காக எந்த ஒரு வெளி எதிரியையும் விடக் கூடுதலாக சுமந்திரன் அணி வேலை செய்கின்றது.



ஈபிடிபியுடன் தமிழரசுக் கட்சி பேச்சுவார்த்தைக்கு போனதும் இந்த அடிப்படையில் தான். ஆனால் அதனால் ஏற்படும் பின்னுதைப்பு கட்சியைக் கடுமையாக பாதிக்கக்கூடிய நிலைமைகள் தெரிகின்றன. இதில் சுமந்திரனுக்கு ஆறுதலான விடயம் என்னவென்றால் சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக கட்சிக்குள் காணப்படும் சக்திகளுக்கு தலைமை தாங்க இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரை தயாரில்லை என்பது தான். இதனால் சுமந்திரன் மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்னரும் படிப்படியாக கட்சிக்குள் தன் பிடியை பலப்படுத்தி வருகிறார். மந்திரித்து ஏவி விடப்பட்ட சேவலைப் போல அவர் அங்கலாய்ப்போடு ஓடிக் கொண்டேயிருக்கிறார். ஒரு கட்சியின் பதில் செயலாளர் இவ்வளவுக்குத் தீயாக வேலை செய்வதில்லை. ஆனால் சுமந்திரன் தொடர்ந்து இயங்குகிறார். முன்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் பொழுது கட்சியின் எல்லாமுமாக அவர் தோன்றினார். இப்பொழுதும் அந்தப் பாத்திரத்தை எப்படித் தக்க வைப்பது என்று சிந்தித்துத் திட்டமிட்டு உழைக்கிறார். அடுத்து வரக்கூடிய தேர்தல்களில் எப்படியும் மக்கள் ஆணையைப் பெற்று விட வேண்டும் என்ற தவிப்பு அதில் தெரிகிறது.

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் தலைமைப் போட்டி என்பது பலமான தலைமைகள் இரண்டு இருப்பதால் ஏற்பட்டது அல்ல. இரண்டுமே பலவீனமான தலைமைகள் என்பதால் ஏற்பட்டது தான் என்பதைக் கடந்த ஆண்டு நிரூபித்து விட்டது. இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கஜேந்திரகுமாரின் தலைமைத்துவத்தை பலப்படுத்த இது தான் தருணம் என்று நம்புவதாகத் தெரிகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை கஜேந்திரகுமார் கொழும்பில் நடாத்திய ஊடகச் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் சுமந்திரன் அணிக்குப் பொறி வைப்பவை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த 15 ஆண்டுகளாக தன்னை ஒரு மாற்று அணியாகத் தான் ஸ்தாபித்து வந்திருக்கிறது. தன்னை ஒரு பிரதான நீரோட்டக் கட்சியாகக் கருதி வடக்கு கிழக்கு தழுவிய ஒரு பெருங்கட்சியாக தன்னை கட்டமைத்துக் கொள்ள அக்கட்சி தவறி விட்டது. 15 ஆண்டுகளின் பின் கஜேந்திரக்குமார் உடல் ரீதியாகவும் நோய் வாய்ப்பட்டு தேறிய பின், அந்தக் கட்சி அவருக்கு நெருக்கமான சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் தூண்டுதலால் தனது வழமையான வாய்ப்பாட்டிலிருந்து இறங்கி வருவதாகத் தெரிகிறது.

ஆனால் வடக்கு கிழக்கு தழுவிய ஒரு பெருங் கட்சியாக அவர்கள் வளர்வதற்கு இதை விடக் கடுமையாக உழைக்க வேண்டும். அதாவது தமிழரசுக் கட்சிக்கு மாற்றீடாக வளர மேலும் கடுமையாக உழைக்க வேண்டும். அவர்கள் அப்படி உழைக்கும் வரையிலும் தமிழரசுக் கட்சி தான் முதன்மைக் கட்சியாக தொடர்ந்துமிருக்கும். புதிய கூட்டு நிலைத்திருக்குமாக இருந்தால் தமிழ்த் தேசிய அரசியலில் இரு கட்சிப் பண்பு மீண்டும் தலை தூக்கும்.

தமிழ்த் தேசிய அரசியலில் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்ட கூட்டுக்களைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய கட்சிகளும் சரி ஆயுதப் போராட்ட இயக்கங்களும் சரி தங்களுக்குள்ளேயும் மோதியிருக்கின்றன. தங்களுக்கு இடையிலும் மோதியிருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தொடங்கி ஆயுதப் போராட்ட காலத்தில் திம்பு பேச்சு வார்த்தையை நோக்கி உருவாக்கப்பட்ட இயங்கங்களின் கூட்டு. அதன்பின் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதன் பின் உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவை. அதன்பின் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு வரையிலுமான எல்லாக் கூட்டுக்களும் ஒரு கட்டத்தின் பின் குலைந்து விட்டன. கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலான தொகுக்கப்பட்ட தோல்வியென்பது கூட்டுக்களின் தோல்வியுந்தான்.

இப்பொழுது ஒரு கூட்டு உருவாகியிருக்கிறது. எனினும் இது கூட பிரம்மாண்டமான ஒரு கூட்டு இல்லை. தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் வடக்கு கிழக்கு தழுவிய பெருங் கட்சியாக, முதன்மைக் கட்சியாகக் காணப்படுகின்றது. எனவே இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதிய அரசியல் ரத்தச் சுற்றோட்டங்கள் தமிழ்த் தேசிய அரசியலில் இரு கட்சி நிலையை பலப்படுத்துமா?

மேற்கத்திய ஜனநாயகங்களில் உள்ளது போல இரு கட்சிப் போட்டி நிலைமை என்பது அங்கு ஆரோக்கியமானது. ஆனால் நீதிக்காக போராடும், அரசற்ற மக்களாகிய தமிழ் மக்களைப் பொறுத்தவரை கடந்த 16 ஆண்டு காலத் தேக்கம், தோல்வி என்பவற்றின் பின்னணியில், அது ஆரோக்கியமானது அல்ல. பொது எதிரிக்கு எதிராகத் தேசம் திரண்டு நிற்காது. இரண்டாக நிற்கும். கட்சி மைய அரசியல் இப்படித் தான் இருக்கும். கட்சிகளால் மட்டும் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

31 மே 2025 - 13 யூன் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 12 யூன் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரம்பலம் முருகேசபிள்ளை

புளியங்டலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2025 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் நண்பர்களுடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2025 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகலிங்கம் முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகலிங்கம் முத்தையா அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினை வாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகலிங்கம் முத்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 45வது நாள் நினைவஞ்சலி



### திருமதி சிவலிங்கம் மகேஸ்வரி

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவலிங்கம் மகேஸ்வரி அவர்களது 45ம் நாள் நினைவு நாள் 31 மே 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவலிங்கம் மகேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கோபிநாத் கணேசமூர்த்தி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது நான்காவது ஆண்டு நினைவுநாள் 27 மே 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17,4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னையா தவரட்ணம்
### திருமதி செல்வநிதி தவரட்ணம்

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா தவரட்ணம் அவர்களது 17வது ஆண்டு நினைவாகவும் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வநிதி தவரட்ணம் அவர்களது 4வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் 05 யூன் 2025 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னார்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




31 மே 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவலிங்கம் மகேஸ்வரி அவர்களது 45ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகலிங்கம் முத்தையா அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 யூன் 2025 வியாழக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா முத்தையா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளும் திருமதி செல்வநிதி தவரட்ணம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளுமாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் இணையர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




06 யூன் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதாகரன் சாமினி இணையர்களது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




07 யூன் 2025 சனிக்கிழமை அமெரிக்காவில் வசிக்கும் Mr & Mrs Arun - Hanah ஆகியோரின் இரு மன இணைவு நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




07 யூன் 2025 சனிக்கிழமை அமெரிக்காவில் வசிக்கும் Mr & Mrs Arun - Hanah ஆகியோரின் இரு மன இணைவு நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




07 யூன் 2025 சனிக்கிழமை அமெரிக்காவில் வசிக்கும் Mr & Mrs Arun - Hanah ஆகியோரின் இரு மன இணைவு நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குசிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




10 யூன் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகள் புதுமனை வாழ்வு புகுந்து 4வது ஆண்டு நிறைவையொட்டி அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




10 யூன் 2025 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திருமதி சிவலிங்கம் மகேஸ்வரி அவர்களது 82வது பிறந்தநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 யூன் 2025 புதன்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசபிள்ளை பேரம்பலம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 யூன் 2025 புதன்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 யூன் 2025 வியாழக்கிழமை கனடாவின் முன்னணி வர்த்தகப் பிரமுகரும் சமூக செயற்பாட்டாளரும் இன உணர்வாளருமான திரு செல்லத்துரை கிருஷ்ணகோபால் அவர்களது 65வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கிருஷ்ணகோபால் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




12 யூன் 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் வீதியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




28 மே 2025 புதன்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் விதுசன் சச்சிதானந்தன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 மே 2025 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகலிங்கம் முத்தையா அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# எந்தச் செய்தியையும் முந்தித் தரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா அரங்கு நிறைந்த மக்களுடன் "சங்கீத சங்கமம் 2025"



எங்கள் அன்பான அழைப்பையேற்று உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு வேர்களைத் தேடுங்கள் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய - ஈழத்தில் இருந்து வருகை தந்த ஈழத்தமிழினத்தின் செஞ்சொற்செல்வர் - அறப்பணியாளர் திரு ஆறு.திருமுருகன் அவர்களுக்கும்

தமிழகத்தில் இருந்து வருகை தந்து விழாவை சங்கீத சங்கமம் இசை நிகழ்ச்சி மூலம் சிறப்பித்த கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களுக்கும்

அரங்கு நிறைந்த மக்களாகத் திரண்டு வந்து உயர்வான இரண்டு நோக்கங்களுக்காக நடைபெற்ற இந்நிகழ்வைச் சிறப்பித்த என் இனிய வாசகர்களுக்கும் கலா ரசிகர்களுக்கும் மற்றும் அனைத்து வகையிலும் உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் குறிப்பாக அனுசரனை வழங்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும் ஊடகத்துறை நண்பர்களுக்கும் என் இதயத்தால் - நெஞ்சத்தால் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

T.K.பரமேஸ்வரன் - ஆசிரியர் ஈழநாடு



# எந்தச் செய்தியையும் முந்தித் தரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா அரங்கு நிறைந்த மக்களுடன் "சங்கீத சங்கமம் 2025"























போட்டோ
ஐயா 4 U

# டக்ளஸ் தோழரும்(?) தேசியவாதிகளும்!

இலங்கை அரசியலில் NPP செல்வாக்குப் பெற்றதோடு தமிழ், முஸ்லிம், மலையக, சிங்கள அரசியல் எல்லாமே தடுமாற்றத்துக்குள்ளாகி விட்டன. குறிப்பாகத் தமிழ்த்தேசியவாத அரசியற் கட்சிகள் பெரும் குழப்பத்திற்குள்ளாகியுள்ளன.

இவ்வளவுக்கும் NPP ஒன்றும் ஆகச் சிறந்த அரசியல் விளைவுகளை உருவாக்கிய சக்தியாக இன்னும் வளர்ச்சியடையவில்லை. எதிர் காலத்தில் அதற்கான சாத்தியங்கள் இருக்கலாம். இதைப் பற்றிப் பல தடவை குறிப்பிட்டதால், மேலும் விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். அல்லது இன்னொரு கட்டுரையில் தனியாகப் பார்த்துக் கொள்ளலாம்.

இப்பொழுது நமது கவனம், NPP யின் எழுச்சியானது, தமிழ்த்தேசிய அரசியலை எப்படி நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறது? அதனால் ஏற்பட்டுள்ள குணாம்ச மாற்றங்கள் என்ன? எவ்வளவு தூரத்துக்குப் படியிறக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

NPP யை ஆதரித்தால் அல்லது அதனுடன் அரசியல் ரீதியான உடன்பாடுகள் எதையாவது வைத்துக் கொண்டால், அது ஏனைய தென்னிலங்கைத் தேசியக் கட்சிகளைப் போலன்றி, அப்படியே தம்மை உள்வாங்கி விழுங்கி விடும். பிராந்திய அரசியலுக்கு (தமிழ் அரசியலுக்கு) இடமில்லாமல் செய்து விடும். ஆகவே அதனுடன் இடைச் சமரசத்துக்குப் போக முடியாது என்ற அச்சத்தினால் எப்படியாவது NPP ஐத் தமிழ்ப் பகுதிகளில் தோற்கடிக்க வேண்டும் அல்லது எதிர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் எதையெதையெல்லாமோ செய்து கொண்டிருக்கின்றன.

இதில் தமிழ்த் தேசியவாதக் கட்சிகள், அல்லாத கட்சிகள் என்ற பேதமெல்லாம் கிடையாது. எல்லாமே உச்சப் பதட்டத்தோடு தான் உள்ளன.

இதனால் தமிழ் அரசியல் பரப்பில் ஏராளம் காட்சி மாற்றங்கள். திடீர்த் திருப்பங்கள். புரிந்து கொள்ளவே முடியாத ஆச்சரியமான சம்பவங்கள் எல்லாம் நடக்கின்றன. வரலாற்றில் முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு தினமும் எதிர்பார்க்காத அதிர்ச்சிகரமான சேதிகள் வந்து கொண்டிருக்கின்றன. இது ஊடகப் பரப்பிலும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

இந்த வாரம் நடந்த மூன்று முக்கிய விடயங்களைப் பற்றிச் சொல்லலாம்.

1.அடைந்தால் மகாதேவி. இல்லையேல் மரண தேவி என்ற பிடிவாதத்தோடு, 'ஒரு நாடு இரு தேசம்' கொள்கையே எமது உயிர் என்று சொல்லிக் கொண்டிருந்த கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரவையும் அதற்கு அப்பால் நின்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் சேர்ந்துள்ளன. இந்தக் கூட்டு வெறுமனே உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கானது மட்டுமல்ல, கொள்கை சார்ந்த கூட்டு என இரண்டு தரப்பும் அறிவித்துள்ளன. அதற்கான ஒரு எழுத்து மூலமான உடன்படிக்கையும் செய்யப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால், தேர்தலுக்கு முன்பு செய்யப்படாமல், தேர்தலுக்குப் பின்னர் செய்யப்பட்ட அதற்கான தேவைகளும் அவசியங்களும் உள்ளதால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு.

2. இப்படி இணைந்தாலும் இந்தக் கூட்டினால் எதிர்பார்த்த அளவுக்கு சபைகளில் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. அப்படிக் கைப்பற்ற வேண்டுமாக இருந்தால், அதற்கு இன்னொரு தரப்பின் ஆதரவு வேண்டும். அதற்காக ஈ.டி.பி.யின் ஆதரவைப் பெறலாமா என்று ஆலோசிக்க முற்பட்டிருக்கிறது இந்தக் கூட்டு. இதற்கான முயற்சியாகத் தனிப்பட்ட ரீதியிலான உரையாடல்கள் சித்தார்த்தனுக்கும் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் தொலைபேசி வாயிலாகச் சிறிய அளவில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்தக் கூட்டின் இன்னொரு தரப்பினரான கஜேந்திரகுமார் இதைக் மறுத்திருக்கிறார்.

3.தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வி.கே சிவஞானம், தாம் ஆட்சி அமைப்பதற்கு வாய்ப்புள்ள சபைகளுக்கு ஆதரவு கேட்டு ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவிடம், அவருடைய பணிமனையான ஸ்ரீதர் தியேட்டருக்குச் சென்றது. இதுவும் அரசியற் தேவைகளின் பாற்பட்ட ஒரு நடவடிக்கை. அதற்கான முயற்சி. இதைத் தமிழரசுக் கட்சியிலிருந்து இதுவரையில் யாரும் எதிர்க்கவில்லை என்றாலும் கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்களிடையே சற்றுக் குழப்பமான நிலை உண்டு.

இவற்றுக்கு அரசியல் ரீதியாகப் பெறுமானங்களும் உண்டு. விமர்சனங்களும் உண்டு. அதை அணுக வேண்டிய விதமே வேறு. அப்படி இந்த விடயம் அறிவு சார்ந்து அணுகப்பட்டிருந்தால் அதனால் பயனுண்டு. நிறைவாகவும் இருந்திருக்கும். அது தமிழ்ப்பரப்பில் நிகழவில்லை. இது தான் துயரமானது.

தமிழ்ப் பரப்பென்பது, இன்னும் மூடுண்ட இருட் பிராந்தியத்துக்குள்ளே தான் கட்டுண்டுள்ளது. இதில் குறிப்பாக இளைய தலைமுறையினரும் சிக்கியிருப்பதே மிகுந்த கவலையை அளிக்கிறது. கடந்த தலைமுறைதான் தவறுகளின் கூடாரத்துக்குள் தங்களுடைய தலைகளை வைத்திருந்தது என்றால், இளைய தலைமுறையும் அப்படியா இருக்க வேண்டும்? அதுவாவது ஒளியைக் காண வேண்டாமா? என்பதால் தான் சமூக வலைத்தளங்கள் போர்க்களமாகி, குருதி சிந்திக் கொண்டிருக்கின்றன. ஏட்டிக்குப் போட்டியாகக் கணைகள் பாய்கின்றன. கட்சிகளின் ஆதரவாளர்களிற் சிலர் தாக்குதலின் உக்கிரம் தாங்க முடியாமல் பதுங்கு குழிகளுக்குள் மறைந்து கொண்டுள்ளனர்.

இப்பொழுது தமிழ்த்தேசியவாத அரசியற் பரப்பில் நடந்து கொண்டிருப்பதெல்லாம், கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க முடியாத சங்கதிகள். அதிகம் ஏன், கடந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வரையிற் கூட தமிழ்த்தேசிய முகாமின் பீரங்கிகள் ஏட்டிக்குப் போட்டியாகவே நிறுத்தப்பட்டிருந்தன. தமிழ்த் தேசியவாதத்துக்கு எதிரான தரப்பை நோக்கி மட்டுமல்ல, தமக்குள்ளேயே தமிழ்த்தேசியவாதத்துக்குள்ளேயே — எதிரெதிர்முனையில் பீரங்கிகள் நிறுத்தப்பட்டன.

தேர்தல் முடிவுகள் உருவாக்கிய சூழல், இதையெல்லாம் மாற்றி விட்டது. இப்பொழுது போர்க்களம் மூடப்பட்டு, தலைவர்களும் தளபதிகளும் சமாதானத் தூதுகளை அனுப்பி, சந்திப்புகளைச் செய்து கொள்கின்றனர். இந்தச் சந்திப்புகளில் ஆளையாள் கட்டி அணைத்து ஆரத் தழுவிக் கொள்கிறார்கள்.









தமிழ்த்தேசியப் பேரவையில் உள்ள ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், சரவணபவன், ஐங்கரநேசன், அருந்தவபாலன் போன்றவர்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கூட்டில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியோடு சேர முடியாது என்று இரண்டு மாதத்துக்கு முன் பிடிவாதமாக நின்றார்கள். தேர்தல் முடிவுகளுக்கு பிறகு இந்தப் பிடிவாதமெல்லாம் கரைந்து விட்டது. அதாவது இரண்டு மாதங்களில் ஒரு தலைகீழ் மாற்றம்.

இதற்கு அவர்களின் தரப்பிலிருந்து ஒரு நியாயத்தைச் சொல்லக் கூடும். அப்போது கொள்கைக்கான கூட்டாக யாரும் பேசவில்லை. தேர்தல் கூட்டாக மட்டுமே சிந்திக்கப்பட்டது. இப்போது கொள்கைக்கான கூட்டாக இருப்பதால், எங்களின் ஆதரவைக் கொடுத்துள்ளோம் என.

அதைப் போல சிவஞானம் டக்ளஸ் தேவானந்தாவைத் தேடிச் ஸ்ரீதர் தியேட்டருக்கு (ஈ.பி.டி.பி பணிமனைக்கு) சென்றதை சுமந்திரன் வேறு விதமாக வியாக்கியானப்படுத்தியிருக்கிறார். ஈ.பி.டி.பியுடன் மட்டுமல்ல, அதிக பெரும்பான்மையைக் கொண்ட தரப்பாக தமிழரசுக் கட்சி இருப்பதால், ஆட்சியை அமைப்பதற்காக ஆதரவைப் பல கட்சிகளிடமும் கோரினோம். அதில் ஒன்று இது என்பதாக.

அதாவது ஆதரவைக் கோருவது வேறு. அரசியற் கூட்டு என்பது வேறு என்பதாக. இருந்தாலும் சிவஞானம் ஸ்ரீதர் தியேட்டருக்குப் போனது தவறு. தமிழரசுக் கட்சி எப்படித் தன்னுடைய தகுதியை விட்டுப் படியிறங்கலாம் என்று கொந்தளிக்கின்றது புரட்சிப்படை. ஆனால் அரசியலில் நிரந்தரமான முடிவுகள் (அதாவது முடிந்த முடிவுகள்) என எவையும் இல்லை. அடிப்படையில் இருக்கும் கொள்கையோடு, அதற்குச் சேதாரங்கள் வராத வகையில், நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இயங்குவதே அரசியலாகும். இதையே சாணக்கியம் (Chanakya), இராஜதந்திரம் (Diplomacy), தந்திரோபாயம் (Strategy) என்று அரசியல் வரலாறு குறிப்பிடுகிறது.

உலகம் முழுவதிலும் வரலாறு முழுவதிலும் இதற்குரிய ஆளுமைகளும் அடையாளங்களும் நிறைய உண்டு. சாணக்கியர், நிக்கோலோ மாக்கியவல்லி, கன்பூசியஸ் போன்ற மேதைகள் இதைப் பற்றித் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் நம்முடைய சமூகச் சூழலில் அரசியலை எவரும் எப்படியும் கையாளலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. முகநூலில் அல்லது சமூக வலைத் தளங்களில் உள்ளவர்கள் எல்லாம் அரசியலைத் தீர்மானிக்கும் வல்லமையுள்ளோர் என்ற ஒரு நிலையை உருவாக்கியுள்ளனர். இவர்களுடைய பதிவுகளைப் பார்த்து அரசியற் கட்சிகள் தடுமாறுகின்றன. தலைவர்கள் குழம்பிப் போகிறார்கள். உண்மையில் அப்படி இருக்கவே கூடாது.

சமூக வலைத்தளங்களில் அபிப்பிராயங்களைப் பகிர்வோரில் பலரும் களச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் அல்ல. அரசியல் விடயங்களை, அதன் தாற்பரியங்களைப் புரிந்து கொண்டவர்களும் அல்ல. இவர்கள் தமது விருப்பு வெறுப்புகளை, அபிப்பிராயங்களைப் பகிர்வோராக இருக்கலாமே தவிர, முடிவுகளை எடுக்கும் சக்திகளாகவோ தீர்மானிக்கும் தரப்பாகவோ இருக்க முடியாது.

இதை மறுத்து, சமூக வலைத்தளங்களுக்கு இன்று வலுவுண்டு. சமூக வலைத்தளப் பதிவர்களால் பல மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அல்லது மாற்றங்களுக்கு அவர்கள் தூண்டு விசையாக இருந்துள்ளனர். இருக்கின்றனர் என யாரும் சொல்லக் கூடும். அவ்வாறான பதிவுகளையும் அவற்றின் விளைவாக உருவாகிய போராட்டங்களையும் ஆழ்ந்து கவனித்தால், அவற்றின் கருத்தியல் தெளிவையும் அவற்றில் உள்ள பன்மைத்துவம், ஜனநாயக அடிப்படை, சர்வதேசத் தன்மை போன்றவற்றை இனங்காண முடியும்.

தமிழ்ச் சமூகத்தின் சமூக வலைத்தளப் பதிவுகள் அப்படியா உள்ளன? வெறும் உணர்ச்சிக் கோசங்களாகவே மலிந்து கிடக்கின்றன. என்பதால்தான் ஜனநாயக மறுப்புக் குரல்களாக துரோகி — தியாகி என்ற கூக்குரல்கள் ஒலிக்கின்றன. (22ம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சிச் சபைகள் கட்சிகளின் குத்துச்சண்டை களங்களாக மாறுமா?

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**



கடந்த வெள்ளிக்கிழமை தமிழரசு கட்சியின் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் யாழ்ப்பாணம் ஃபாக்ஸ் ஹோட்டலில் சந்தித்தன. உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்கும் போது தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கு இடையே புரிந்துணர்வோடு செயல்பட முடியுமா என்பது தொடர்பாக ஆராயும் நோக்கிலான ஒரு சந்திப்பு.

இந்த சந்திப்புக்கு கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு முன்பு யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் டாண் டிவியில் ஒரு நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டது. அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் தமிழரசுக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சயந்தனும் கலந்து கொண்டார்கள். இவர்களோடு நானும் கலந்து கொண்டேன். நிகழ்ச்சியின் பேசுபொருள், அண்மையில் தமிழ் அரசியலில் அதிகம் விவாதிக்கப்பட்ட, அரச வர்த்தமானியாகும்.

அரசாங்கம் மேற்படி வர்த்தமானியை மீளப் பெற்றிருக்கும் ஒரு பின்னணியில், அவ்வாறு அரசாங்கம் பின்வாங்கியதற்கு தங்களுடைய தலைவர்களின் கடுமையான உழைப்புதான் காரணம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியும் மாறி மாறி உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் ஒரு அரசியல் பின்னணியில், மேற்படி நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டது.

தொடக்கத்தில் இரண்டு கட்சி பிரதிநிதிகளும் அமைதியாக ஒருவர் மற்றவரைத் தாக்காமல் கருத்து தெரிவித்தார்கள். ஆனால் ஒரு கட்டத்தில் கஜேந்திரன் சுமந்திரனை மறைமுகமாகவும் நேரடியாகவும் விமர்சிக்கத் தொடங்கினார். தமது கட்சிக்காரர்களின் இராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் நாடாளுமன்றத்தில் தனது கட்சித் தலைவர் ஆற்றிய உரை என்பவற்றின் விளைவாகத் தான் அந்த வர்த்தமானி மீள பெறப்பட்டது என்று அவர் வாதிட்டார். குறிப்பாக தமிழரசுக் கட்சியின் சிறீதரனை மென்மையாக அனுகிய அவர் சுமந்திரனை கடுமையாக விமர்சித்தார்.

பதிலுக்கு சயந்தனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை விமர்சிக்கத் தொடங்கினார். இரண்டு பேர்களும் ஒருவர் மற்றவரைக் குற்றம் சாட்டினார்கள். ஒருவர் மற்றவர் மீது அவதூறுகளை அள்ளி வீசினார்கள். ஒருவர் மற்றவரை நோக்கிச் சூழ்ச்சிக் கோட்பாடுகளை பிரயோகித்தார்கள்.

நான் அந்த மோதலை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் ஓய்ந்தபின் கேட்டேன், அப்படியென்றால் இன்னும் ஒரு மணி நேரத்தில் நடக்கவிருக்கும் சந்திப்பில் என்னத்தைப் பேசப் போகிறீர்கள்? என்று.

நிகழ்ச்சிப் பதிவு முடிந்ததும் இருவரும் முகத்தில் வெறுப்பைக் காட்டாமல் சகஜமாக உரையாடினார்கள். சிரித்துக் கொண்டு வெளியேறினார்கள்.

ஆனால் தொலைக்காட்சியில் அவர்கள் காட்டிய சண்டை அவர்களுடைய ஆதரவாளர்களால் மேலும் விஸ்தரிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த வாக்குவாதத்தின் மூலம் அவர்கள் தமிழ் மக்களுக்குக் காட்டும் படம் என்ன? கொடுக்கும் செய்தி என்ன ?

தொலைக்காட்சியில் அப்படி மோதியவர்கள் நிகழ்ச்சிப் பதிவு முடிந்த பின் எப்படித் தேநீர் கோப்பைகளோடு சகஜமாக கதைக்க முடிந்தது? மிக மோசமான குற்றச்சாட்டுகளை முன்



வைத்து விட்டு எதுவுமே நடவாதது போல சகஜமாக சிரித்துக் கொண்டு வெளியேறினார்கள். ஆனால் அதைப் பார்க்கும் மக்களுக்கு எப்படிப்பட்ட சித்திரம் கிடைக்கும்? அது தேசத்தைக் கட்டி எழுப்ப உதவும் ஒரு சித்திரமா? தொலைக்காட்சிக்கு முன் அமைதியாக புரிந்துணர்வோடு கருத்தைக் கூறி விட்டு தேனீர் கோப்பையோடு வேண்டுமானால் சண்டை பிடித்திருக்கலாம் என்று ஒரு பல்கலைக்கழக துறைத் தலைவர் மேற்படி மோதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது இருப்பது கட்சி அரசியல் தான். கட்சி அரசியல் என்றால் என்ன? தமது வாக்காளர்களுக்கு வரும் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் தெரிவிப்பது அல்லது அதற்காக போராடுவது அல்லது அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை உட்பட ஏதோ ஒரு நடவடிக்கையை எடுப்பது இவற்றின் மூலம் தமது மக்களுக்கு நீதியை பரிகாரத்தை நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பது. அதற்கு தானே கட்சிகள் இருக்கின்றன அதற்காகத் தானே மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கிறார்கள் அதற்காக தானே நாடாளுமன்றத்திலும் மாகாண சபையிலும் உள்ளூராட்சி சபைகளிலும் அவர்களுக்கு வரப்பிரசாதங்கள் கிடைக்கின்றன. அது அவர்களுடைய கடமை அதைச் செய்து விட்டு எங்களுடைய கட்சியால்தான் அந்த வெற்றி கிடைத்தது என்று வெற்றிக்கு உரிமை கூறுவது எதைக் காட்டுகின்றது? தமிழ் தேசிய அரசியல் கட்சி அரசியலாகச் சுருங்கியதன் சீரழிவை காட்டுகின்றதா?

இது நடந்து கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்தின் பின் ஃபாக்ஸ் கொட்டையில் நடந்த சந்திப்பின் முடிவில் இரண்டு கட்சிப் பெரும் அவர்களும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்கள். அக்கருத்துக்களின் படி புதிய உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்கும் பொழுது தமிழ் தேசிய ஒருங்கிணைப்புக்கான வாய்ப்புகள் பிரகாசமாக இல்லை என்று தெரிகிறது.

அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் நடந்த மோதலின் நீட்சியும் அகட்சியமாகத் தான் உள்ளூராட்சி சபைகளிலும் அரசியல் செய்ய போகிறோம் என்றால் உள்ளூராட்சி சபைகள் உருப்படாது. உள்ளூராட்சி சபைகளை வெற்றிகரமாக நிர்வகிப்பதற்கு உரிய தேவையான பொதுவான வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைக்கு கொண்டு வரவே முடியாது. ஆளுக்கு ஆள் போட்டி போட்டுக் கொண்டு திட்டங்களை எதிர்ப்பார்கள் குழப்புவார்கள். வட மாகாண சபையைக் குழப்பியது போல.

அதாவது கட்சிச் சண்டைகளின் உள்ளூர் களங்களாக உள்ளூராட்சி மன்றங்கள் மாறக்கூடிய ஆபத்தே அதிகமாக தெரிகிறது. இது தான் தமிழ் தேசிய அரசியல் கட்சிச் சூழல் என்றால் அது தேசிய மக்கள் சக்திக்கு அதிகம் வாய்ப்பானது. தமிழ் கட்சிகள்



உற்றுக் கவனிக்க வேண்டிய ஒரு வித்தியாசம் உண்டு. என்னவெனில், கொழும்பில் இது வரை காலமும் ஆட்சி செய்தது மிதவாதப் பாரம்பரியத்தில் வந்த, பெருமளவுக்கு மேட்டுக்குடியினர் ஆகிய சிங்கள தலைவர்கள் தான் கட்சிகள் தான். ஆனால் இப்பொழுது ஆட்சியில் இருப்பது கட்சி அல்ல,ஒரு இயக்கம். இரண்டு முறை நசுக்கப்பட்ட போதும் இரண்டு முறை தடை செய்யப்பட்ட போதும், தன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழுந்த ஓர் இயக்கம். எனவே அதை எதிர்கொள்வது என்பது இதற்கு முன் இருந்த தென்னிலங்கை ஆளுங்கட்சிகளை எதிர் கொண்டது போல அல்ல.

உள்ளூராட்சி சபை தேர்தலை நோக்கி இந்த அரசாங்கம் கண்டியில் தலதா மாளிகையில் உள்ள புனித தந்த தாதுவை பொதுமக்கள் தரிசிப்பதற்காகத் திறந்து விட்டது. 16 ஆண்டுகளின் பின் அவ்வாறு திறந்து விட்டதன் மூலம் அவர்கள் சிங்கள பௌத்த கூட்டுணர்வை தம் வசப்படுத்தி வாக்குகளாக மாற்ற முயற்சித்தார்கள். அப்படித்தான் சர்ச்சைக்குரிய அரச வர்த்தமானியும் ஒரு தேர்தல் காலத்தில் வெளியிடப்பட்டது.

அதன் விளைவு கள் தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்திக்கு எதிரான உணர்வு களை ஒருங்குவிக்க உதவும் என்பதை நன்கு தெரிந்து கொண்டும் அவர்கள் அந்த வர்த்தமானியைப் பிரசரித்தார்களா? அது தமிழ்த் தேசிய அரசியலில் வாக்குகளைத் திரட்ட உதவியது. மறுவளமாக அப்படி ஒரு வர்த்தமானியைக் கொண்டு வந்ததன் மூலம் சிங்கள பௌத்த பெருந்தேசிய உணர்வைத் திருப்திப்படுத்தலாமா என்று அரசாங்கம் சிந்தித்ததா?

ஏற்கனவே தையிட்டி விகாரை விவகாரத்தை தீர்க்க முடியாத அரசாங்கம் அரசாங்கம், அந்த சர்ச்சை தணிவதற்குள்ளேயே, காணிகளைச் சுவிகரிக்கும் வர்த்தமானியை ஏன் வெளிப்பட்டது? அதுவும் ஒரு தேர்தல் காலத்தில்? தமிழ் மக்களால் எதிர்க்கப்படும் காணி சுவீகரிப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பதன் மூலம் சிங்கள பௌத்த வாக்காளர்களை கவரும் உள்நோக்கம் அதில் இருந்ததா? மேலும் தமிழ் கட்சிகளின் கவனத்தை புதிய விடயங்களின் மீது திசை திருப்பும் உள்நோக்கமும் அதில் இருந்ததா?

கொஞ்ச காலம் தையிட்டி் இடையில் ஆனையிறவு உப்பு பின்னர் வர்த்த. மானி இப்படியே காலத்துக்கு காலம் ஏதாவது ஒரு புதிய விஷயத்தின் மீது தமிழ் கட்சிகளின் கவனத்தை திசை திருப்பி விட்டால், தமிழ் மக்கள் ஒட்டுமொத்த வழி வரைபடம் ஒன்றை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த போராட்டம் ஒன்றை நோக்கி ஒருங்கிணைய மாட்டார்கள். ஒவ்வொரு கட்சியும் தனக்கே பாராட்டு கிடைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு போராடும் ஓர் அரசியல் களத்தில் தேசத்தை திரட்டுவது தேசத்தைக் கட்டி எழுப்புவது போன்ற வார்த்தைகளுக்கு புனிதம் இருக்காது.

# கிழக்குத் தமிழர் அரசியல்:- தனித்துவம்! மாற்று! சந்தர்ப்பங்கள்! சவால்கள்!

- அழகு குணசீலன் -

கிழக்கு மாகாணத்தமிழர்களின் அரசியல் எதிர்காலம் குறித்து உள்ளூராட்சி தேர்தலுக்கு பின்னர் மீண்டும் உரத்து பேசப்படுகிறது. கிழக்குத் தமிழர்களின் அரசியல் தனித்துவம், மாற்று அரசியல், இந்த மாற்றுக்கு இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களும், சவால்களும் என்ன? என்பது இன்றைய சூழலில் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

இந்த கிழக்கு கருத்தியல் ஒன்றும் புதியதல்ல. நல்லையா மாஸ்டர், கே.டபிள்யூ . தேவநாயகம் காலத்திலும், செ.இராசதுரை தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து வெளியேறிய பின்னரும் பேசப்பட்ட ஒன்றுதான். ஆனால் அன்றைய அரசியல் சூழலும், ஆயுதங்களும் இவர்களின் கரங்களை கட்டிப்போட்டன.

ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து கருணா அம்மான் பிரிந்த பின்னர் கிழக்கில் தனித்துவ, மாற்று அரசியலுக்கான களம் முன்னெப் போதும் இல்லாதவாறு உருவாகியது. இந்த சாதகமான அரசியல் வாய்ப்புக்களை அன்றைய சூழலில் எண்ணற்ற சவால்களுக்கு மத்தியிலும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் பயன்படுத்தினர். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் ஏற்பட்ட பிளவும், அதைத் தொடர்ந்து புலிகளின் தலைமை கிழக்கு புலிகளுக்கும், ஆதரவாளர்களுக்கும் எதிராக எடுத்த நடவடிக்கைகளும் கிழக்கின் தனித்துவ தமிழர் அரசியலுக்கு உந்து சக்தியாக இருந்தது.உடனடிக் காரணமாகவும் அமைந்தது. யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கருணாவும் பிள்ளையானும் கிழக்கு தமிழர்களின் அரசியல் தலைமைப்படுத்துவமாக தங்களை அடையாளப்படுத்துவதற்கான ஒரு அசாதாரண அரசியல் சூழல் உருவாகியது.

புலிகள் கருணா பிளவுக்கு பின்னரான கடந்த இரண்டு தசாப்தங்களில் கிழக்கில் தனித்துவ அரசியலுக்கான அடித்தளம் ஏற்ற, இறக்கங்களுடன் அமைந்திருக்கிறது. யுத்த சூழலில் வரையறுக்கப்பட்ட ஜனநாயகத்துடன் இடம்பெற்ற உள்ளூராட்சி, மாகாண சபை தேர்தல்களில் மக்களின் அங்கீகாரத்தை அதே வரையறுக்கப்பட்ட தேர்தல் ஜனநாயகத்துடன் பெறக்கூடியதாக இருந்தது.

தேர்தல்களுக்கும் அப்பால் இலங்கை அரசியல் அமைப்பு- தேர்தல் சட்டங்களின் படி அமைச்சரவை அந்தஸ்து கொண்ட ஒரு அமைச்சராக கருணா அம்மானும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட கிழக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சராக பிள்ளையானும் தனிப்பட்ட முரண்பாடுகளுக்கு மத்தியிலும் ஒரு வகையில் ஒரு கூட்டு தலைமைத்துவத்தை கிழக்கின் தனித்துவ அரசியலுக்கும், மக்களுக்கும் வழங்கினார்கள். இதை தமிழ் மக்கள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 2020 நாடாளுமன்ற தேர்தல் மூலமான அங்கீகாரமாகவும் வழங்கியிருந்தார்கள்.

அப்போது இது பல தரப்பட்ட விமர்சனங்களுக்கு மத்தியிலும் கிழக்கிற்கான ஒரு தனித்துவ அரசியலாக மட்டும் அன்றி மாற்று அரசியல் என்ற வடிவத்தையும் பெற்றது.அந்த மாற்றே தமிழ்த்தேசிய அரசியலுக்கு மாற்றான இணக்க -அபிவிருத்தி அரசியல். இந்த அரசியல் போக்கு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் இன்று வரை தொடர்கிறது. ஆனால் கிழக்கு மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் அபிலாஷைகளை அல்லது எதிர்பார்புக்களை நிறைவேற்றுவதில் அது முழுமையாக இல்லா விட்டாலும் பகுதியாக தவறியிருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதன் விளைவே கடந்த -2025 நாடாளுமன்ற தேர்தலில் கிழக்கு அரசியலுக்கு ஏற்பட்ட தோல்வியாகும்.

இந்தத் தோல்வியில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்கள் கடந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு கிழக்கு அரசியலுக்குள் தனிநபர், குழு, கட்சி முரண்பாடுகளை கடந்து பிள்ளையான், கருணா, வியாழேந்திரனை ஒரு புரிந்துணர்வுக்கு கொண்டு வருவதற்காக காலம் கட்டாய அழுத்தத்தை கொடுத்தது.

விளைவு: கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்ற புரிந்துணர்வு ஒப்பந்த அறிவிப்பு 15.03.2025 இல் வெளியானது. ஆனால் மறுபக்கத்தில் இந்த பெயர் கிழக்கு தனித்துவ அரசியலுக்குள் மற்றொரு மோதலை ஏற்படுத்தியுள்ளது. இப்போது கற்றுக் கொண்ட தேர்தல் தோல்வி பாடங்களுக்கு அப்பால் கிழக்கு அரசியல் ஒரு தார்மீக அரசியல் நேர்மையையும் பொறுப்புக் கூறலுக்கான உண்மையையும் கூடவே வேண்டி நிற்கின்றது.


கிழக்கு தமிழர் கூட்டமைப்பானது 2018 ம் ஆண்டு கிழக்குத் தமிழர்களின் சமூக, பொருளாதார, அரசியல் சீரழிவு கண்டு அவற்றை நிவர்த்திக்கும் முகமாக த.கோபாலகிருஷ்ணன், சட்டத்தரணி த.சிவபாலன் ஆகியோரின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் அரசியல் பிரிவு என்று அறிய வருகிறது. அத்துடன் 2019 இல் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகவும் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரமும் பேராசிரியர் சு.சிவரெத்தினத்தின் அறிக்கையின் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்களுக்கு பின்னால் கல்வியாளர்கள், புத்திஜீவிகள், சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் கிழக்கு தமிழர் ஒன்றியம், அதன் அரசியல் பிரிவான கிழக்கு தமிழர் கூட்டமைப்பு என்பனவற்றின் முக்கியஸ்தரும், செயற்பாட்டாளருமான செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் அரங்கத்தில் தனது சொல்லித்தான் ஆகவேண்டும் பத்தியில் கிழக்கு தமிழ் மக்களுக்கான ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளார். அதில் வெளிச்சத்திற்கு ஏற்பட்ட ஈர்ப்பு விசையை கொடுத்தது.

எச்சரிக்கையாக இருக்க வேண்டியது கிழக்கு மாகாணத் தமிழர்களே. எதிர் வரும் மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக்கட்சி உட்பட வடக்கை தளமாகக் கொண்ட அத்தனை தமிழ் அரசியல் கட்சிகளை களையும் முற்றாக நிராகரித்து கிழக்கை தளமாகக் கொண்ட மாற்று அரசியல் அணியொன்றை அடையாளம் காணவேண்டிய தேவை முன்னெப் போதும் இல்லாத முன்னுரிமையோடு இப்போது கிழக்கு தமிழர்களை எதிர் நோக்கியுள்ளது. கிழக்கு தமிழர்கள் இப்போதிருந்தே தம்மைத் தனித்துவமான அரசியல் கட்டமைப்பாகத் தகவமைத்துக் கொள்ளுதல் அவசியம். கண்கெட்ட பின் சூரிய நமஷ்காரம் பண்ணுவதில் பயனில்லை"

என்று கிழக்கின் எதிர்காலம் குறித்து எச்சரித்துள்ளார். 2008 முதல் 2015 வரை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கிழக்கு மாகாணத்தமிழர்களுக்கு சம்பந்தன் தலைமையில் இழைத்த அநீதிகளை சுட்டி காட்டவும், பட்டியலிடவும் அவர் தவறவில்லை.

இந்தச் சூழலில் கிழக்குத் தமிழர் அரசியல் கடந்த காலங்கள் போன்று தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய புதிய பாடங்கள் நிறைய





உண்டு. இது கிழக்கு தனித்துவ அரசியல் குறித்து இங்கு பேசப்படும் இருதரப்புக்கும் பொதுவானது.

1.தமிழ்த்தேசிய கட்சிகள் உள்ளூராட்சி தேர்தலை தனித்தனியாக எதிர்கொண்டு கூட்டாக ஆட்சி அமைப்பது என்ற சுமந்திரனின் பொறிமுறையில் வடக்கில் தொடரும் திருகுதாளங்கள் இந்த பொறிமுறையின் தோல்வி.

2. வடக்கில் ஈ.பி.டி.பி. உடன் பேசிய சி.வி.கே. சிவஞானம் கூறும் விளக்கம் இப்படி இருக்கிறது. கேட்டுப் போனேன் கல்யாணம் கட்ட அல்ல சின்ன வீடாக இந்த அரசியல் அநாகரிகம் கிழக்குக்கும் பரவாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

3.கிழக்கில் முஸ்லீம் கட்சிகளில், சுயேட்சைகளில் பொறுக்கி எடுக்க முடியாது என்றால் சுமந்திரன் அநுரவுடன் பேசினாலும் ஆச்சரியம் இல்லை. ஏனெனில் வடக்கு விவகாரத்தில் தலையிட்டுள்ள அநுர அரசின் முக்கிய அமைச்சர் சுமந்திரனின் பெரும்பான்மை கோட்பாட்டை நியாயப்படுத்த வேண்டிய தேவை என்ன? ஜனநாயகத்தில் சிறிய கட்சிகளின் பங்கு என்ன? இது இடதுசாரிகளின் பல்தேசிய கம்பனி அரசியல்.

4. வடக்கில் ஈ.பி.டி.பி.யோடு பேசிய, பேச திகதி குறித்த தமிழ்த்தேசியம் கிழக்கில் ரி.எம்.வி.பி.யுடன் பேசத் தயாரில்லை. துரோகி என்றாலும் நாங்கள் வடக்கார் என்ற பிரதேசவாத மேலாண்மை அரசியல் அதிகார திமிர் நியாயம். வடக்கில் தமிழ்க்கட்சிகளோடு தமிழ்பேசும் கட்சிகளோடு பேச முடிவெடுக்கப்பட்டதாம். ஆக, கிழக்கில் தமிழ்க் கட்சிகளும் இல்லை. தமிழ்பேசுபவர்களும் இல்லை. இதற்கு பெயர் புரட்டு அப்புக்காத்துதனம்.

5.தமிழ்த்தேசிய கட்சிகளின் இந்த அரசியல் சின்னத்தனம் ஜே.வி.பி. வடக்கு, கிழக்கில் இலங்கையர் என்ற போர்வையில் பேரினவாத அரசியல் செய்ய வழியைத் திறந்து விட்டுள்ளது.

6.இந்த தமிழ்த்தேசிய அரசியல் தவறுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜே.வி.பி. தனது பேரினவாத அரசியலை விரிவாக்கம் செய்ய இலகுவாக ஏதுவாகும்.

இந்த அடிப்படையில் கிழக்கில் எதிர்கால அரசியல் நகர்வுகள் எப்படி அமையும் என்பது ஊகிக்க முடியாத ஒன்றல்ல. தமிழ்த்தேசிய கட்சிகளின் இன்றைய இக்கட்டான நிலையை பாடமாகக்கொண்டு கிழக்கு தனித்துவ அரசியல் தலைமைகள் ஒன்றிணைய வேண்டும். இல்லையேல் அடிப்படை கிழக்கு தனித்துவ அரசியல் கோட்பாடிற்கு எதிராக ஆளுக்காள் சுட்டு விரலை நீட்டி கிழக்கு அரசியலிலும் சுமந்திரன் கஜேந்திரகுமார் உருவாகுவது காலத்தின் கொடுமையாக அமையும்.

மூத்த கிழக்கு தமிழர் கூட்டமைப்பும், இளைய படகு கிழக்கு தமிழர் கூட்டமைப்பும் கடந்த கால சரி, பிழைகளை மனம்விட்டு, கபடத்தனங்களை கடந்து பேசி கிழக்கு அரசியல் தலைமைத்துவம் ஒன்றை இணைந்து வழங்க வேண்டும். நிலவும் இடைவெளியை குறைக்க முதலில் கிழக்கு தனித்துவ அரசியலில் இணங்கி, அடுத்து மாற்று அரசியலுக்காக செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றி பேசலாம்.


இல்லையேல் இது ஓட்டுநர் யார் என்றும், இருக்கை வசதிகளுக்காகவும் போட்டிக்கு பஸ் ஓட்டி கிழக்கு மக்களுக்கான கடைசி பஸ்ஸையும் தவற விட்டு நீங்களே எல்லோரும் சேர்ந்து ஜே.வி.பி. பஸ்ஸில் மக்களை ஏற்றி விட்ட கதையாக முடியும். வேறு வழியின்றி மக்களும் தமிழ்த்தேசிய அதிருப்தியையும் சேர்த்து தானாகவும் ஏறவேண்டியிருக்கும்.

இப்பத்தியில் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு" என்ற பெயரின் பின்னணி பற்றி நீதிமன்ற குறுக்கு விசாரணை ஒன்றை செய்ய விரும்பவில்லை. இன்றைய சூழலில் அதுபற்றி பேசுவதற்கான பொருத்தமான இடம் இதுவாகத் தெரியவில்லை. இது இருதரப்புக்கும் உரிய விவகாரம். பொது வெளியில் அது பற்றி ஒரு வரையறைக்கு அப்பால் பேசுவது கிழக்கு அரசியலுக்கு பின்னடைவையே ஏற்படுத்தும்.

சிந்திப்பீர்களா? இலைகள் இலக்கல்ல...! இலைகள் மறைத்தாலும் கிளியே இலக்கு...!!

# மீண்ட ருவாண்டாவும் மீளாத இலங்கையும்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



31 ஆண்டுகளுக்கு முன்னர் மிகப் பெரிய இனஅழிப்பை எதிர்கொண்ட ருவாண்டா தொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. ருவாண்டாவுக்கான இலங்கையின் கௌரவ தூதுவராக இருக்கின்ற கல்லி அலெஸ் (Cally Alles) அந்தக் கட்டுரையை எழுதியிருந்தார்.

ருவாண்டாவின் வரலாறு, இனப்படுகொலையில் எதிர்கொண்ட அழிவுகள், அதற்குப் பின்னர் அங்கு ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார, அரசியல், சமூக மாற்றங்கள் குறித்து மிகவிரிவாக அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

அந்த கட்டுரையை எழுதிய கல்லி அலெஸ், 1978 ஆம் ஆண்டிலிருந்து ருவாண்டாவில் வசித்து வருகின்ற இலங்கையரான தேயிலைத் தோட்டத் தொழிலதிபர்.

1994 ஆம் ஆண்டு ருவாண்டாவின் ஜனாதிபதியாக இருந்த ஜீவேனல் ஹபியாரிமானா, பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து டுட்சி சிறுபான்மையினர் மீது, ஹுட்டு பெரும்பான்மையினர் இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்டனர்.

தலைநகர் கிகாலியில் இலட்சக்கணக்கான மக்கள் தங்கி இருந்த அகதிகள் முகாம்களுக்குள் நுழைந்து ஈவிரக்கமற்ற இனப்படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன. சுட்டும் வெட்டியும், இலட்சக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பெண்கள், பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

கடந்த நூற்றாண்டில் மிகக் கோரமாக அரங்கேறிய ஒரு இனப்படுகொலையாக இது அடையாளப்படுத்தப்படுகிறது. சுமார் 3 மாத காலப் பகுதிக்குள் ருவாண்டாவில் சுமார் 8 இலட்சம் வரையிலான சிறுபான்மை டுட்சிக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாக பதிவுகள் கூறுகின்றன.

சுமார் 5 இலட்சம் வரையான பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இதற்குப் பின்னர், அங்கு சர்வதேச தலையீட்டுடன் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆட்சியில் இருந்த– இனப்படுகொலை அரசாங்கம விரட்டியடிக்கப்பட்டது. அதன் பின்னர் இனப்படுகொலை தொடர்பான விசாரணைகள் சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்டன.

இப்போது ருவாண்டா ஆபிரிக்காவிலேயே மிகமிக அமைதியான ஒரு நாடாக விளங்குகிறது. உலகளவில் கூட, அமைதியான நாடு என்று சொல்லக் கூடிய நிலையில் இருக்கிறது.

ருவாண்டா என்றால் எதிர்மறையான ஒரு எண்ணமே மனதில் தோன்றும். அந்த அளவுக்கு அங்கே இனஅழிப்பின் அடையாளம் உலகம் முழுவதும் பதிவாகியிருக்கிறது.

ஆனால், இப்போது அந்த நாட்டின் நிலைமை அதற்கு மாறாக உள்ளது என்பதை, ருவாண்டாவுக்கான இலங்கையின் கௌரவ தூதுவர் கல்லி அலெசின் கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

பாதுகாப்பு மிக்க ஒரு நாடாக அது மாறியிருக்கிறது. பொருளாதாரம் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

2023ஆம் ஆண்டு 8.2 வீத பொருளாதார வளர்ச்சியை கொண்டிருந்த ருவாண்டா, 2024 ஆம் ஆண்டு 8.9 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டியிருக்கிறது.

இது அந்த நாடு எந்தளவு வேகமாக பொருளாதார ரீதியாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

அங்கு சேவைகள் துறையும், தொழிற்துறைகளும் விவசாயத் துறையும் வேகமாக வளர்ச்சி அடைகின்றன. குறிப்பாக பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான நாடாக அது மாறியிருக்கிறது.




அந்த நாட்டின் பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் 63.75வீத வீதமானோர் பெண்களாக இருக்கின்றனர்.

பெண்கள் அங்கு மிகவும் பாதுகாப்பான நிலையை உணர்கிறார்கள். பெண் சுற்றுலா பயணிகள் தனித்து சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு மிகஉகந்த இடமாக இருக்கிறது.

இப்படி ருவாண்டாவின் புகழை அடுக்கியிருக்கிறார், கல்லி அலெஸ்.

நீண்ட இனஅழிப்பு வரலாற்றை கொண்டிருக்கும் இலங்கைத்தீவு போரில் இருந்து முற்று முழுதாக விடுபட்டு, 16 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும், இலங்கைத் தீவு அரசியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, சமூக ரீதியாகவோ அனைவருக்கும் பாதுகாப்பான நாடாக உருவாகவில்லை– உருவாக்கப்படவில்லை.

நாட்டின் பொருளாதாரம் உறுதியான நிலையில் இல்லை, அது மோசமாக வீழ்ச்சி அடைந்திருக்கிறது. வங்குரோத்து நிலையில் இருந்து மீளுவதாகச் சொல்லப்பட்டாலும், மக்களின் வாழ்க்கைத் தரமும் பொருளாதார நிலையும் மோசமான நிலையை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறது.

நாட்டின் பொருளாதாரம் மீட்சி பெற்று வருவதாக கூறப்படுகின்ற போதும், அதனை நிரூபிக்கக் கூடிய வகையில், மக்களால் உணரக் கூடிய வகையில், நாட்டின் பொருளாதாரம் செழிப்பை நோக்கி நகரவில்லை.

அனைத்து சமூகங்களுக்குமான பொருளாதாரப் பாதுகாப்பு நிலை உறுதிப்படுத்தப்படாமல் கேள்விக் குறியான நிலையே நீடிக்கிறது.

அதேவேளை அரசியல் ரீதியாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. போருக்கான அடிப்படைக் காரணிகளை தீர்ப்பதற்கு ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இப்போதைய அரசாங்கம், முன்னைய அரசாங்கங்கள் செயற்படுத்திய விடயங்களை கூட, வலுவற்றதாக்கும் செயற்பாடுகளையே முன்னெடுக்கிறது.

எந்த ஒரு போருக்கும் அரசியல் ரீதியான காரணிகள் இருக்கும்.

இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கும் அரசியல் காரணிகள் இருந்தன.

தமிழர்கள் மீது தொடர்ச்சியாக இழைக்கப்பட்டு வந்த அநீதிகளும் அட்டூழியங்களும் இனப்படுகொலைகளும் தான் பெரும் போருக்குள் நாடு தள்ளப்படுவதற்கு காரணம். அரசியல் ரீதியாக தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படாமல், அவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படாமல் போனதன் விளைவு அது.

அதற்காக முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகளும் சமாதான பேச்சுக்களும் எந்த பயனும் தராத நிலையில் இலங்கையின் ஆட்சியாளர்கள், தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை நசுக்குவது என்ற பெயரில் மிகப்பெரிய இனஅழிப்பை அரங்கேற்றினார்கள். அதன் பின்னரும், தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிரவோ உரிமைகளை உறுதிப்படுத்தவோ இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அரசியல் ரீதியாக அதனை உறுதிப்படுத்தாமல் நிலையான அமைதியை ஏற்படுத்த முடியாது. ஆனாலும் எந்த ஒரு சிங்கள ஆட்சியாளரும் அதற்குத் தயாராக இல்லை.

அதேபோல போரின்போது இடம்பெற்ற இனஅழிப்பு, போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, நம்பகமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவோ, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படவோ இல்லை.

பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்குவதற்கு எந்த ஒரு சிங்கள ஆட்சியாளர்களும் துணியாத நிலையிலேயே இருக்கின்றனர். இதன் காரணமாக, பாதிக்கப்பட்டவர்கள் நீதி கிடைக்காமல் போராடுகின்ற நிலை இன்று வரை தொடர்கிறது.

பொறுப்புக்கூறல் இல்லாமல் நல்லிணக்கத்தை உருவாக்க முடியாது. ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்கள் எந்தப் பொறுப்புக் கூறலும் இல்லாமல் – குற்றமிழைத்தவர்களை தண்டனையிலிருந்து தப்பிக்க வைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முனைகிறார்கள்.

இது இலங்கையில் நல்லிணக்கம், நிலையான அமைதி ஏற்படுவதற்கு உள்ள மிகப்பெரிய தடையாக உள்ளது.

31 ஆண்டுகளுக்கு முன்னர் மிகப பெரிய இனஅழிப்பை எதிர்கொண்ட இருபதாம் நூற்றாண்டில் மிகப்பெரிய அவலத்த எதிர்கொண்ட ருவாண்டா இன்று மீள் எழுச்சி பெற்றிருக்கிறது என்றால், அதற்கு ஒரே காரணம், அங்கு இடம்பெற்ற இன அழிப்புக்கு பொறுப்புக்கூறல் இடம் பெற்றது தான்.

இனஅழிப்பை மேற்கொண்டவர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். பெருமளவானோர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதன் ஊடாக முற்று முழுதாக இல்லா விட்டாலும் பொறுப்புக்கூறல் கடப்பாடு பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, அதற்கு சர்வதேச துணையும் இருந்தது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில், அத்தகைய நிலை இல்லை.

சர்வதேசமும் தனது முழுமையான அதிகாரத்தை பிரயோகிக்கவில்லை, இலங்கை அரசும் பொறுப்புக்கூறலை ஒரு முக்கிய கடப்பாடாக கருதி, நிறைவேற்றவில்லை .

தற்போதைய அரசாங்கம் கூட, ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வு வழங்குவதாக கூறிய இப்போதைய அரசாங்கம், அதனை தொடங்கவே இல்லை.

இவ்வாறான நிலையில், இலங்கையின் நிலையான அமைதிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் எந்த வகையிலும் ஏற்ற சூழல் உருவாக்கப்படவில்லை.

போருக்குப் பிந்திய அமைதி என்பது அரசியல், பொருளாதார, பொறுப்புக் கூறல், சமூக ரீதியாக மாற்றங்களின் ஊடாகத் தான், சாத்தியப்படும்.

அத்தகைய மாற்றங்களை இலங்கை சந்திப்பதற்கான வாய்ப்புகள் ஏதும், கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தென்படுவதாக இல்லை.

# “நன்றி இல்லாதவர்” ட்ரம்ப் - எலான்மஸ்க் நட்பு முறிவும் பரஸ்பர சாடல்களும் நிஜமானதா?

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் - தொழிலதிபர் எலான் மஸ்க் இடையேயான மோதல் பொதுவெளியில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இருவரும் ஒருவர் மீது ஒருவர் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.



எலான் மஸ்க் உடன் எனக்கு சிறந்த நட்பு ரீதியிலான உறவு இருந்தது. ஆனால் இனியும் நாங்கள் அப்படி இருப்போமோ இதை தொடருவோமோ என எனக்கு தெரியவில்லை. மஸ்க் மீது நான் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளேன் என ‘தி ஹுவல்’ அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பின் போது ட்ரம்ப் தெரிவித்தார். இது நேரலையில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

எல்லோரையும் விட இந்த புதிய சட்ட மூலம் மசோதா குறித்து மஸ்க் முழுவதுமாக அறிவார். அதன் உள் விவரங்களையும் அவர் நன்கு தெரியும். இந்தச் சூழலில் திடீரென்று இப்போது அவருக்கு என்ன பிரச்சினை என்று தெரியவில்லை. மஸ்க் எனக்கு எதிராக இருப்பது குறித்து நான்பொருட்படுத்தவில்லை. ஆனால் அவர் இதை முன்பே செய்திருக்க வேண்டும் என ட்ரம்ப் கூறினார்.

உடனடியாக நிகழ்நேரத்தில் எக்ஸ் வலைதளத்தில் ட்வீட் மூலம் மஸ்க் பதிலடி கொடுத்தார்.

ட்ரம்பின் புதிய வரி மசோதாவுக்கு வெளிப்படையாக எதிர்ப்பு தெரிவித்திருந்தார் மஸ்க். தொடர்ந்து அமெரிக்க அரசு செயல்திறன் துறையின் (டிஓஜிஇ) சிறப்பு ஊழியர் பொறுப்பில் இருந்து அண்மையில் அவர் விலகினார். நான் மட்டும் இல்லையென்றால் 2024 தேர்தலில் ட்ரம்ப் தோற்றிருப்பார். அவர் நன்றி இல்லாதவர். ட்ரம்ப் பொய் சொல்கிறார். அந்த மசோதா எனது பார்வைக்கு கிடைக்கவில்லை. இது இந்த ஆண்டின் பிற்பாதியில் பொருளாதார மந்த நிலையை உருவாக்கும்.

ட்ரம்ப் எனது நிறுவனங்களின் அரசு ஒப்பந்தத்தை ரத்து செய்வது குறித்து பேசினார். அந்த வகையில் ஸ்பேஸ்-எக்ஸின் டிராகன் விண்கலன் திட்டம் சார்ந்த செயல்பாடுகளை உடனடியாக நிறுத்துகிறது என மஸ்க் எக்ஸ் தளத்தில் தெரிவித்தார்.

இதோடு ட்ரம்ப்பை நீக்கி விட்டு துணை அதிபர் ஜே.டி.வான்ஸை அதிபராக நியமிக்க வேண்டும் என எக்ஸ் தளத்தில் பயனர் ஒருவர் தெரிவித்திருந்தார். ‘ஆம்’ என அதற்கு பதில் கொடுத்துள்ளார் மஸ்க்.

மேலும் அமெரிக்காவில் புதிய கட்சியை உருவாக்க வேண்டுமா என்பது குறித்து எக்ஸ் தளத்தில் வாக்கெடுப்பு ஒன்றையும் மஸ்க் முன்னெடுத்துள்ளார். எப்ஸ்டீன் ஃபைல்ஸ் வெளியிடாதது குறித்தும் மஸ்க் கேள்வி எழுப்பியுள்ளார். இதில் ட்ரம்ப் சம்மந்தப்பட்டு இருப்பது தான் காரணம் என தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பட்ஜெட் திட்டம் ஏமாற்றம் அளித்ததால் ட்ரம்ப் நிர்வாகத்தில் இருந்து தொழிலதிபர் எலான் மஸ்க் கடந்த வாரம் வெளியேறினார். அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் 2-வது முறையாக பதவியேற்றதும் அரசு செலவினங்களை குறைப்பதற்காக தொழிலதிபர் எலான் மஸ்க் தலைமையில் அரசு செயல்திறன் துறை (டிஓஜிஇ) என்று உருவாக்கப்பட்டது.

ஆண்டு தோறும் எலான் மஸ்க் 130 நாட்கள் சிறப்பு அரசு ஊழியராக செயல்படுவார் என தெரிவிக்கப்பட்டது. இத்துறை அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பது உட்பட பல ஆலோசனைகளை அமெரிக்க அரசுக்கு வழங்கி வந்தது. இதற்கு அமெரிக்காவில் எதிர்ப்பும் கிளம்பியது.

இந்நிலையில் அமெரிக்க அரசின் பட்ஜெட் தயார் செய்யப்பட்டது. இது எலான் மஸ்க் தலைமையிலான அரசு செயல்திறன் துறை தெரிவித்த பரிந்துரைகளுக்கு மாறாக இருந்துள்ளது. மக்களுக்கு ஏராளமான வரிச் சலுகைகளுடன் ராணுவ பட்ஜெட் செலவினங்களும் அதிகமாக இருந்தது.

கடந்த 2017-ம் ஆண்டு அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் பல வரிச்சலுகைகளை அளித்தது. அதேபோல் தற்போதும் 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு 1இ300 டாலர் கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில் வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் லட்சக்கணக்கான அமெரிக்கர்கள் பயனடைவர். பட்ஜெட் அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. ட்ரம்பின் மிகப் பெரிய மற்றும் அருமையான பட்ஜெட் ஏமாற்றம் அளிப்பதாக தொழிலதிபர் எலான் மஸ்க் கூறினார்.

சிறப்பு அரசு ஊழியராக எனக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிவுக்கு வருகிறது. வீண் செலவினங்களை குறைக்க வாய்ப்பளித்த டொனால்டு ட்ரம்ப்புக்கு நன்றி. அமெரிக்க அரசின் மிகப் பெரிய பட்ஜெட் நிதி பற்றாக்குறையை அதிகரித்துள்ளது. அரசு செயல்திறன் துறையின் பணிகளை குறைத்து மதிப்பிட்டுள்ளது. இந்த பட்ஜெட் பெரியதாக இருக்கலாம் அல்லது அருமையானதாக இருக்கலாம். ஆனால் இரண்டும் சேர்ந்ததாக இருக்குமா என தெரியவில்லை என மஸ்க் அப்போது தெரிவித்தார். அரசுப் பணி காலத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியதாக மஸ்க் மீது குற்றச்சாட்டு எழுந்தது. அதை அவர் மறுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலிய பிரதமருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்த நீதிபதிகளுக்கு எதிராக தடையை அறிவித்தது அமெரிக்கா!

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகுவிற்கு எதிராக பிடியாணை பிறப்பித்த நீதிபதிஉட்பட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகளிற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் தடைகளை விதித்துள்ளது.

நால்வரில் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையினரின் நடவடிக்கைகளை இலக்கு வைத்து செயற்பட்ட நீதிபதியொருவரும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகளான இந்த நால்வரும் அமெரிக்காவையும் அதன் நெருங்கிய சகாவான இஸ்ரேலையும் இலக்கு வைத்து ஐசிசியின் சட்டவிரோத ஆதாரமற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மார்க்கோ ரூபியோ தெரிவித்துள்ளார் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நீதிமன்றத்தின் முன் விசாரணை மற்றும் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த நீதிபதிகள் ரெய்ன் அடிலெய்ட் சோஃபி அலபினி கன்சோ மற்றும் பெட்டி ஹோஹ்லர் ஆகியோர் நெதன்யாகு மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் ஆகியோரை குறி வைத்து பிடியாணைகளை பிறப்பிப்பதற்கு அனுமதி வழங்கினார்கள் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை சர்வதேச நீதித்துறை நிறுவனத்தின் சுதந்திரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் தெளிவான முயற்சி என தெரிவித்துள்ள ஐசிசி பொறுப்புக் கூறலிற்காக பாடுபடுபவர்களை இலக்கு வைப்பதுமோதலில் சிக்குண்டுள்ள மக்களிற்கு எந்த வகையிலும் உதவாது என தெரிவித்துள்ளது.

ஐ.சி.சியின் மேல்முறையீட்டுப் பிரிவைச் சேர்ந்த நீதிபதிகள் உகாண்டாவைச் சேர்ந்த சோலோமி பலுங்கி போசா மற்றும் பெருவைச் சேர்ந்த லஸ் டெல் கார்மென் இபனெஸ் கார்ரான்சா ஆகியோர் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் அமெரிக்க படையினர் இழைத்ததாக தெரிவிக்கப்படும் யுத்த குற்றங்கள் குறித்து ஐ.சி.சி விசாரணையைத் தொடங்க வழி வகுத்த குழுவில் இடம்பெற்றனர்

நவம்பர் 2024 இல் ஐ.சி.சி தலைமை வழக்கறிஞர் கரீம் கான் நெதன்யாகு மற்றும் கேலன்ட் மற்றும் மூன்று மூத்த ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக கைது வாரண்டுகளை பிறப்பித்தார். இந்த நடவடிக்கை பைடன் நிர்வாகத்திடமிருந்து எதிர்ப்புகளைப் பெற்றது முன்னாள் ஜனாதிபதி இதை `மூர்க்கத்தனமானது` என்று அழைத்தார். ஐ.நா தலைமையிலான பாலியல் துஷ்பிரயோக விசாரணைக்கு மத்தியில் கான் கடந்த மாதம் தனது பதவியில் இருந்து விலகினார்



ஜனாதிபதி டிரம்பின் முதல் பதவிக் காலத்தில் அமெரிக்க அரசாங்கம் ஐ.சி.சி வழக்கறிஞர் ஃபடோ பென்சவுடா மற்றும் மூத்த அதிகாரி ஃபாகிசோ மோச்சோச்சோகோ ஆகியோர் மீது ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை விசாரித்ததற்காக தடைகளை விதித்தது - பின்னர் பைடன் நிர்வாகத்தால் நீக்கப்பட்டது.

அப்போதைய வெளியுறவுத்துறை செயலாளர் மைக் பாம்பியோ மற்ற ஐ.சி.சி அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு விசா கட்டுப்பாடுகளை விதித்தார்.

இந்த நடவடிக்கையை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வரவேற்க வாய்ப்புள்ளது - மார்ச் 2023 இல் நீதிமன்றம் அவருக்கு பிடியாணை பிறப்பித்தது.

ஐ.சி.சி-யை நிறுவிய ரோம் சட்டத்தில் அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ கைச்சாத்திடவில்லை..

# NPP புரியாத புதிரா? புரிந்தும் புரியாத பதிலா?

NPP மீது தமிழ்க் கட்சிகளும் கடுப்பாக உள்ளன. சிங்களக் கட்சிகளும் கடுப்பாக உள்ளன. முஸ்லிம், மலையகக் கட்சிகளும் கடுப்பாக உள்ளன. இப்படி எல்லாத் தரப்புகளும் கடுப்பாக இருக்கும் அளவுக்கு உண்மையிலேயே NPP தீய சக்தியா? அதாவது இதுவரையான வரலாற்றில் அதிகாரத்தில் இருந்த சக்திகளை விட NPP தீங்கானதா? மோசமானதா?

என்று சரத் பொன்சேகா, விமல் வீரவன்ச, சரத் வீரசேகரா போன்றோர் சொல்கிறார்கள்.

சிங்களக் கட்சிகளைப் போல ஏனைய இனவாதிகளைப்போலவே NPPயும் உள்ளது. NPP யினரும் செயற்படுகிறார்கள்" என்று தமிழ்த்தேசியத் தரப்பினர் சொல்கின்றனர். அப்படியென்றால் இதில் எது உண்மை?

போது அது தவிர்க்க முடியாமல் மேற்சொன்ன ஐந்து தரப்புகளில் ஒன்றுக்கோ அல்லது ஐந்துக்கோ தானே ஆதரவாக இருக்கும்?

அந்தத் தரப்புகள் கடந்த காலத்தில் இன ஒடுக்குமுறையையும் பார பட்சத்தையும் தாராளமாகவே மேற்கொண்டவையல்லவா? மட்டுமல்ல, இப்போதும் அதே நிலைப்பாட்டில் உள்ளவையே!



இதேவேளை NPPயின் மீதும் கடுமையான விமர்சனங்கள் உண்டு. இதைப் புரிந்து கொண்டே இந்தக் கட்டுரை விடயங்களை விவாதிக்க முற்படுகிறது.

NPP தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளவும் கவனத்திற் கொள்ளவும் வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

தனக்குக் கிடைத்திருக்கும் வரலாற்று வாய்ப்பை NPP சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. நண்பர்கள் யார்? எதிரிகள் யார் என்று அதனால் கண்டறிய முடியாதிருக்கிறது. முதிர்ச்சியும் பக்குவமும் நிதானமும் இல்லாத பலருடைய கைகளில் பொறுப்புகள் பகிரப்படுகின்றன. ஆற்றலுள்ளவர்களையும் NPP யின் மெய்யான ஆதரவாளர்களையும் அது கண்டறிய முடியாமல் தடுமாறுகிறது. அல்லது அவ்வாறானவர்களை அதனால் உள்வாங்க

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



முடியவில்லை. அதற்குள் நிலவுகின்ற உளக் குழப்பங்களே இதற்குப் பெரிய காரணங்களாகும். இதெல்லாம் NPP ஐப் பலவீனப்படுத்துகின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட சிலரைத் தவிர, ஏனையவர்கள் நிலைமையைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவே உள்ளனர்.

அதாவது இனவாதத்தை முன்னெடு

அப்படியென்றால், NPPயை மக்கள் எப்படி — எதற்காக — ஆதரித்தனர்? ஏன் இன்னும் ஆதரிக்கின்றனர்?

இதுவரையில் இனவாதம் பேசியவர்களை விடவும் இதுவரையில் இனவாதத்தை முன்னெடுத்த கட்சிகளை விடவும் NPP யினரிடம் இனவாதம் மேலோங்கி உள்ளதா?

அல்லது இன வாதத்தைக் கடந்து விட்டோம், மாற்றுச் சக்தி நாங்கள், இடதுசாரிகள்.. என்றெல்லாம் சொல்லிக் கொண்டே இனவாதத்தையே NPPயும் கைக் கொள்கிறது என்ற கோபமா?

சிங்கள இனவாதச் சக்திகளைச் சமாளித்துக் கொள்வதற்காக NPPயும் இனவாதத்தைப் பேச முற்படுகிறதா? அது சரியானதா?

NPPஆட்சிக்கு வந்த பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மக்களுக்கு ஆதரவானவை அதிகமா? எதிரானவை அதிகமா?

ஊழலுடன் NPPயும் தொடர்பு பட்டுள்ளதா? அல்லது ஊழலுக்கு எதிரான நிலைப்பாட்டில் அது உறுதியாகவே நிற்கிறதா?

NPPசெய்த (மேற்கொண்ட) விடயங்களில் பாரதூரமான எதிர்விளைவுகள் எவை? ஊழல் குற்றச்சாட்டுகளோடு தொடர்புபட்டதாகச் சொல்லப்படும் அமைச்சர்கள், அரசியல்வாதிகளில் 10 பேர் வரையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இது குறித்த மக்கள் அபிப்பிராயம் என்ன? அரசியற் தரப்புகளின் நிலைப்பாடு என்ன?

எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு NPP யின் நடவடிக்கைகள் வேகமாக இல்லையா? அதற்கான காரணங்கள் என்னவாக இருக்கும்? இதைக் குறித்து NPP யினர் தெளிவாக்காது இருப்பது ஏன்?

NPP தமிழ் மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக அளவுக்கு அதிகமாக தமிழ் மக்களின் பக்கமாகச் சாய்கிறது" என்ற சிங்களக் கட்சிகளின் எதிர்ப்பிரச்சாரத்தை எப்படி நோக்கலாம்?

தமிழ்க் கட்சிகளுக்குப் பயந்து பல விட்டுக் கொடுப்புகளை ஜனாதிபதியும் (அநுரகுமார திசநாயக்கவும்) NPP யும் செய்வதை அனுமதிக்க முடியாது

இரண்டு தரப்பினாலும் குற்றம் சாட்டப்படும் ஒரு தரப்பு எப்படியாக இருக்கும்? சுருக்கமாகக் கேட்டால், சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையில் ஆட்சி செய்த ஏனைய அரசியற் தரப்பினரை விட NPPமோசமான தரப்பா? என்றால் அது எந்த வகையானது என்று அரசியற்கட்சிகளும் NPP யை எதிர்ப்போரும் தெளிவாகச் சொல்ல (விளக்க) வேண்டும் அல்லவா?

NPP யை எதிர்த்து அதனை அதிகாரத்திலிருந்து அகற்றினால் அந்த இடத்தில் வேறு எந்தச் சக்தியை அமர்த்தலாம்? அல்லது எந்தச் சக்தி அதிகாரத்துக்கு — ஆட்சிக்கு — வரும்?

1.ஐ.தே.க 2.ஐக்கிய மக்கள் சக்தி 3. பொதுஜன பெரமுன 4. சிறிலங்கா சுதந்திரக் கட்சி 5 இந்தக் கட்சிகளின் கூட்டு அல்லது கலவை தானே!

இவை NPP யை விட சிறப்பான நல்லாட்சியை தமிழ் பேசும் மக்களுக்கோ இலங்கையின் அனைத்துச் சமூகங்களுக்கோ வழங்கி விடுமா? அதற்கான உத்தரவாதம் என்ன?

தற்போதைய சூழலில் NPP யை நீக்கினால் அந்த இடத்தில் ராஜபக்ஸக்களின் பொதுஜன பெரமுன அல்லது சஜித் பிரேமதாச தரப்பின் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றில் ஒன்றுதான் அதிகாரத்துக்கு வரக்கூடிய வாய்ப்புகள் உண்டு. இவை இரண்டும் NPPஐ விட முற்போக்கானவையா? அதாவது தீங்கற்றவையா?

இவற்றுக்கு அப்பால் வேறு புதிய சக்தி ஏதாவது வரக்கூடிய சாத்தியமுண்டா? என்றால் அது, எது? இதற்கெல்லாம் யாரும் பதில் சொல்லத் தயாரில்லை.

அப்படியென்றால் எந்த அடிப்படையில் NPPமீதான எதிர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது?

தமிழ் பேசும் மக்கள் NPPஐ எதிர்க்கும்

இதைப் புரிந்து கொண்டும் NPP ஐ எதிர்த்தால் அது மறைமுகமாகவும் நேரடியாகவும் மேற்சொன்ன சக்திகளுக்கே வாய்ப்பாகும் அல்லவா? இதனை யாராவது மறுக்க முடியுமா?

அப்படியென்றால் அதைத் தான் தமிழ் பேசும் தரப்புகள் செய்ய விளைகின்றனவா? அவற்றின் அரசியல் தெரிவும் நிலைப்பாடும் இது தானா?

அல்லது தெரிந்த பேயை விட தெரியாத பிசாசு நல்லது என எண்ணுகின்றனவா? அல்லது ஏனைய சக்திகளை விட NPPஆபத்தானது என விளைகின்றனவா?

ஏனைய தென்னிலங்கை அரசியற் கட்சிகள் வடக்குக் கிழக்கில் வலுவாகக் காலூன்றவில்லை. ஆகையால் பிராந்திய அரசியலுக்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை. மட்டுமல்ல, பிராந்திய அரசியலுக்கு அந்தச் சக்திகள் கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் தாரளமாக வாய்ப்பளித்தன. NPP இதை மறுத்து பிராந்திய சக்திகளின் இருப்பிலும் — பிராந்திய அரசியலிலும் கை வைத்துள்ளது என்ற அச்சத்தின் வெளிப்பாடா?

தெல்லாம் NPP யை எதிர்க்கும் தரப்பினர் மீதான கேள்விகளாகும். இதுபோல இன்னும் பல கேள்விகளுண்டு. இதில் தமிழ் பேசும் மக்களுக்குரிய தனியான கேள்விகளும் உண்டு. இவற்றை எளிதாக புறந்தள்ளி விட முடியாது.

NPP ஐ மட்டுமல்ல எந்தவொரு தரப்பை எதிர்க்கும் போது அதற்குரிய போதிய காரணங்களை விளக்குவது அவசியமாகும். அப்பொழுது தான் அதைக் குறித்து மக்களும் சிந்திக்க முடியும்? உரிய தரப்பும் (NPP) தன்னைப் பரிசீலித்துக் கொள்வதற்கு அதிக வாய்ப்பிருக்கும்.

த்த ஐ.தே.க, சு.க, பொதுஜன பெரமுன போன்றன நாட்டை அக ரீதியாகப் பிளவு படுத்தியது மட்டுமல்ல, அனைத்துச் சமூகங்களுக்கும் நாட்டுக்கும் பேரிழப்புகளையும் உண்டாக்கியவை. அவற்றின் அரசியல் (இனவாதம்) அந்தக் கட்சிகளையே காப்பற்ற முடியாமல் போய் விட்டது. சரியாகச் சொன்னால் அவை வளர்த்த இனவாதத்துக்கு அவையே பலியாகி விட்டன. அதனால் தான் ஒரு மாற்று சக்தி வேண்டும். மாற்று அரசியல் வேண்டும் என்ற அடிப்படையில் NPPக்கான ஆதரவை மக்கள் வழங்கினர். தமிழ் பேசும் மக்களுடைய ஆதரவும் அப்படியானதே.

இதை மறந்து விட்டு அல்லது இதைப் புரிய மறுத்து ஏனைய தீய சக்திகளைப் போலவே NPPயும் செயற்படுமாக இருந்தால், அவற்றின் வழியையே தொடருமாக இருந்தால் நிச்சயமாக விரைவில் ே தோல்வியைச் சந்தித்தே தீரும். தோல்வியை மட்டுமல்ல, அழிவையும் தான்.

இந்தச் சமரசமெல்லாம் தெற்கில் மேலெழும் அல்லது NPP ஐ பலவீனப்படுத்த முற்படும் சிங்களத் தீவிரவாத சக்திகளையும் திருப்பதிப்படுத்த வேண்டிய சூழலால் செய்யப்படுவது என்று இதற்கு யாரும் சமாதானம் சொல்ல முற்பட்டால் அவர்கள் சமகால வாய்ப்பைச் சீரழிப்பவர்கள் மட்டுமல்ல, நாட்டுக்கும் NPPக்கும் கூட தீமைகளையே சிந்திப்பவர்களாக இருப்பர்.

வடக்கில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இளங்குமரன் போன்றோர் மிகப் பலவீனமானவர்களாகவும் பாதகமானவர்களாகவுமே இருக்கின்றனர். மக்களுக்கும் NPPக்கும் மாறானவர்களாகவே செயற்படுகின்றனர்.

(22ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக்கட்சி மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியுள்ளது!



கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 27.05.2025 அன்று திருகோணமலையில் வைத்துக் கைசாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சி எனும் வேதாளம் மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எனும் முருங்கை மரத்தில் ஏறியுள்ளது. இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் 2008இல் நடைபெற்ற போது வடக்கிலிருந்து பிரிந்த கிழக்கு மாகாணத்தில் அதாவது பிரிந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட மாட்டோம், (இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை தேர்தலில் மட்டுமே போட்டியிடுவோம்) எனக் கூறி அப்போது இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அத்தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்தது. (பின்னர் பிரிந்த வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது.)

2008இல் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சார்பில் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்சி அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டது.

இத்தேர்தலில் போட்டியிடாதிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப் பிழையானால் போதுமெனக் கருதி கிழக்கு மாகாணத் தமிழர்கள் எக்கேடுகெட்டாலும் பறவாயில்லை பிள்ளையான் முதலமைச்சராவதைத் தடுப்பதற்காகத் திரை மறைவில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஆதரித்தது மட்டுமல்லாமல் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவுப் ஹக்கீமைக் கொண்டு வருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் முயற்சித்தார். அதற்கு அவர் கூறிய காரணம் “Haheeim is a good Muslim” (ஹக்கீம் ஒரு நல்ல முஸ்லிம்) என்பதாகும்.

இந்த அரசியல் சவால்களையெல்லாம் தாண்டி 2008இல் பிள்ளையான் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக நியமிக்கப் பெறுவதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் விருப்பமும் இந்திய அரசின் செல்வாக்கும் பின்னணியில் இருந்தன என்பது பலரும் அறிந்த விடயமே.

கிழக்கின் தனித்துவம் கிழக்கின் அபிவிருத்திகிழக்கின் ஐக்கியம் என்னும் விடயங்களுடன் கருத்தியல் ரீதியாக இப்பத்தி எழுத்தாளருக்கு உடன்பாடுள்ளதெனினும் பிள்ளையானின் அரசியல் நடத்தைகளுடன் உடன்பாடில்லை. காரணம் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் போன்று கிழக்கின் தனித்துவம் பேசும் இவர்களும் 'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்' ஆகத்தான் நடந்து கொண்டுள்ளனர். அது வேறு விடயம். பிள்ளையானுடைய அரசியல் பலவீனங்களுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சியின் அரசியல் கையாலாகாத்தனம் மறைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்திற்கான அடுத்த மாகாண சபைத் தேர்தல் 2012 இல் நடந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 11 ஆசனங்களும் முஸ்லிம் காங்கிரசுக்கு 07 ஆசனங்களும் கிடைத்தன. ஆட்சியமைப்பதற்கான பேச்சு வார்த்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே நடைபெற்று அவ்வப்போது சறுக்கல்கள் ஏற்பட்ட போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தம்மை ஏமாற்றுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலம்பியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே மறு பக்கத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு வார்த்தை நடத்தி முதலமைச்சர் பதவிக் காலத்தின் முதல் அரைவாசிப் பகுதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும் பின்னரைப் பகுதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் பகிர்ந்து கொள்வது எனும் உடன்பாட்டுக்கு வந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் நஜிப் முதலமைச்சரானார்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமக்குத் துரோகம் இழைத்து விட்டது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓலமிட்டது. அரசியல் கையாலாகாத்தனத்தால் முதலமைச்சர் பதவியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோட்டைவிட்டது.

அதன் பின்னர் இரண்டாவது சந்தர்ப்பம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கதவைத் தட்டியது.

அது என்னவெனில், 2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபாலசிறிசேன வெற்றி பெற்று பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமனம் பெற்று, நல்லாட்சி அரசாங்கம் அமைந்து, இரா. சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதும் அரசாங்கத்தின் அங்கமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்கியது. அப்போதும் கூட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் விட்டு விட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு முதலமைச்சர் பதவியை அரசியல் கொடுக்கல் வாங்கல்களுக் கூடாகக் கொடுத்து விட்டுப் பிச்சை போட்ட மாதிரி அளிக்கப்பட்ட சபையின் பிரதித் தலைவர் பதவியையும் இரு அமைச்சர் பதவிகளையும் பெற்று அமைதியாகச் 'சுகபோகம்' கண்டது.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் கையாலாகாத்தனத்தையும் – சுயலாப அரசியலையும் தான் வெளிப்படுத்தியது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் இது தான் நடக்கப் போகிறது. அதற்கான முன்னாயத்தம் தான் இப்போது கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான 27.05.2025 அன்றைய உடன்படிக்கையாகும். ஆம்! வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதை தான் இது.

கட்டுரையாளர்:–
மட்டக்களப்பில் இருந்து
தம்பியப்பா
கோபாலகிருஷ்ணன்



இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது கிழக்கு மாகாணத் தமிழர்களே. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சி உட்பட வடக்கைத் தளமாகக் கொண்ட அத்தனை தமிழ் அரசியல் கட்சிகளையும் முற்றாக நிராகரித்து கிழக்கைத் தளமாகக் கொண்ட மாற்று அரசியல் அணியொன்றை அடையாளம் காணவேண்டிய தேவை முன்னெப்பொழுதும் இல்லாத முன்னுரிமையோடு இப்போது கிழக்குத் தமிழர்களை எதிர்நோக்கியுள்ளது.

கிழக்குத் தமிழர்கள் இப்போதிருந்தே தம்மைத் தனித்துவ மான அரசியல் கட்டமைப்பாகத் தகவமைத்துக் கொள்ளல் அவசியம். கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் பண்ணுவதால் பலனில்லை.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# புதிய கூட்டு! புதிய நம்பிக்கைகள்?

சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய பழம் பெரும் கட்சிகள் இப்பொழுது பெருமளவுக்குக் காலாவதியாகி விட்டன. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றன உடைந்துடைந்து அவற்றிலிருந்து உருவாகிய புதிய கட்சிகள் தான் இப்பொழுது அரங்கில் காணப்படுகின்றன. இதில் வலதுசாரிக் கட்சிகளும் அடங்கும். இடதுசாரிக் கட்சிகளும் அடங்கும். ஜேவிபி ஒரு இடதுசாரி கட்சியில்லை. எனினும் அவர்களும் தங்களை ஒரு பண்புரு மாற்றத்துக்கு உட்படுத்திக் கொண்ட காரணத்தால் தான்



இப்பொழுது ஆட்சியை அனுபவிக்க முடிகிறது. தனிய ஜேவிபியாக நின்று மக்களைக் கவர முடியாது என்பதனைக் கண்டு கொண்ட பின் அவர்கள் தங்களைத் தேசிய மக்கள் சக்தியாக தகவமைத்துக் கொண்டதன் விளைவு தான் இப்பொழுது அவர்கள் அனுபவிக்கும் ஆட்சி. எனவே தொகுத்துப் பார்த்தால் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக சிங்கள மக்கள் மத்தியில் பழைய பாரம்பரிய கட்சிகள் பொலிவிழந்து போகக் காணலாம். புதிய கட்சிகள், புதிய சின்னங்கள் மேலெழுவதைக் காணலாம். ஆனால் தமிழ் அரசியலில்?

இந்த விடயத்தில் தமிழ் மக்கள் பழமைப் பேணும் பண்புடையவர்களா என்று கேட்க வேண்டியுள்ளது. ஏனென்றால் தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் தொடர்ந்தும் அரங்கில் நிற்கின்றன. வீடு, சைக்கிள் ஆகிய சின்னங்கள் தொடர்ந்து அரங்கில் நிற்கின்றன. ஓர் ஆயுதப் போராட்டத்தின் முடிவுக்கு பின்னரும் தமிழ் அரசியலில் மாறாத காட்சி அது. அப்படியென்றால் தமிழ் மக்கள் பழமை பேணிகளா? அல்லது தமிழ் மக்கள் மத்தியில் புதியதை உருவாக்கும் திறன் உடையவர்கள் குறிப்பாக ஆயுத மோதல் ஒன்றுக்கு பின்னரான ஒரு மிதவாத அரசியலை பண்புரு மாற்ற அரசியலாக முன்னெடுக்கத் தக்கவர்கள் தமிழ்த் தேசிய அரசியல் அரங்கில் இல்லையா?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் பின் நிகழும் புதிய அரசியல் நகர்வுகளைத் தொகுத்துப் பார்த்தால் அப்படித் தான் கேட்க வேண்டியுள்ளது. தமிழரசுக் கட்சி அதே பழைய சின்னத்தோடு தனித்து நிற்கின்றது. தானே பிரதான கட்சி என்றும் வடக்கு கிழக்கு தழுவிய வெற்றிகளைப் பெற்ற கட்சி என்றும் அது நம்புகின்றது. தனக்குரிய முதன்மையை விட்டுக் கொடுத்து ஐக்கிய முயற்சிகளுக்குப் போக அது தயாரில்லை. இது ஒரு பக்கம் இன்னொரு பக்கம் காங்கிரஸ் கட்சி தன்னை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று அழைத்துக் கொண்டாலும் அதே பழைய சின்னம் தான். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் போது காங்கிரஸ் புதிய அணிகளை உள்வாங்கி தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரில் போட்டியிட்டது. அப்பொழுதும் சைக்கிள் சின்னம்தான்.கடந்த வாரம் அவர்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஓர் உடன்படிக்கையை எழுதியிருக்கிறார்கள். அந்த கூட்டுக்காவது சின்னம் மாறுமா?

சின்னத்தை மாற்றுவதென்றால் அல்லது புதிய கூட்டுக்கு ஒரு புதிய சின்னத்தை அறிமுகப்படுத்துவது என்றால் அதை ஒரு தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதற்கு புதிய கூட்டு உருகிப் பிணைந்த வெற்றிகரமான ஒரு கூட்டாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு யாப்பு வேண்டும். இல்லையென்றால் புதிய சின்னத்துக்குப் பொருள் இல்லை. கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட அதே பிரச்சனைகள் இங்கேயும் வரும்.

அது மட்டுமல்ல புதிய கூட்டு தமிழ் தேசிய அரசியலில் புதிதாக என்ன செய்யப் போகிறது? தேர்தல்களில் வெல்லப் போகின்றதா? அல்லது அதற்கும்அப்பால் மக்களைத் தேசமாக திரட்டும் மக்கள் இயக்கமாக கூர்படையப் போகின்றதா?



கஜேந்திரகுமார் என்னதான் கொள்கைக் கூட்டு என்று கூறினாலும் நடைமுறையில் இது கட்சிகளின் கூட்டுத்தான். தேர்தலில் இறங்கப் போகும் கட்சிகளின் கூட்டுத் தான். இப்பொழுதும் கொள்கை ரீதியாக உடன்பட்டால் தமிழரசுக் கட்சியோடு இணையத் தயார் என்று கஜேந்திரக்குமார் கூறுகிறார். இங்கு அவர் கொள்கை என்று கூறுவது இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு எப்படி அமைய வேண்டும் என்ற கொள்கை. ஆனால் அப்படி ஒரு இறுதித் தீர்வை நோக்கி உழைக்க புதிய அரசாங்கம் தயாரா?

இப்போதைக்கு இல்லை. ஆனால் தேர்தல்களில் தமிழ் மக்களின் ஆணையை வென்றால் சில சமயம் தாங்களே தமிழ்த் தரப்பு என்று கூறிக் கொண்டு ஒரு தீர்வைக் கொண்டு வர அவர்கள் முயற்சிக்க கூடும். ஆயின், இப்போதைக்கு வராத ஒரு தீர்வு முயற்சியை நோக்கி மட்டும் ஐக்கியத்தை தீர்மானிக்கலாமா? தீர்வு முயற்சிகளை நோக்கி அதாவது யாப்பு உருவாக்க முயற்சிகளை நோக்கி ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவது சரியா? அல்லது தேர்தலை நோக்கி ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவது சரியா? இது ஒரு தீர்மானகரமான கேள்வி.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எப்படிப்பட்ட தீர்வைத் தரப் போகின்றது என்ற ஊகத்தில் அடிப்படை யில் தான் இங்கு உரையாடல்கள் அதிகம் இடம் பெறுகின்றன. எனவே இப்போதைக்கு வராத் எப்படிப்பட்டது என்று திட்டவட்டமாகத் தெரியாத் ஒரு யாப்பு வரைபை நோக்கி ஐக்கியத்தை திட்டமிடுவதா? அல்லது உடனடிக்கு வரக்கூடிய தேர்தல்களில் மக்கள் ஆணையை வெல்வதா? ஒரு தேசமாகத் தமிழ் மக்களின் ஆணையை வெல்வது என்று திட்டமிட்டு ஐக்கியத்தை கட்டமைப்பதா? எது சரி?

இரண்டாவது தான் சரி. கஜேந்திரகுமார் தான் உருவாக்குவது கொள்கைக் கூட்டு என்று சொன்னாலும் அது நடைமுறையில் தேர்தலை நோக்கிய கட்சிக் கூட்டுத' தான். அது மக்கள் இயக்கமாக மேலெழும் போதே அது கொள்கைக் கூட்டு என்ற முழு வளர்ச்சியைப் பெறும்.

ஆனால் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு கூட்டுக்கள் வேண்டும். கூட்டுக்கள் தான் தமிழ் மக்களின் நம்பிக்கைகளைப் புதுப்பிக்கும். கூட்டுக்கள் தான் தமிழ் மக்களை சோர்வில் இருந்து விடுவிக்கும். கூட்டுக்கள்தான் தமிழ் மக்கள் மத்தியில் தன்னம்பிக்கையை, கூட்டுணர்வை வளர்க்கும். எனவே கூட்டுக்கள் தேவை. அவை சமயோசிதக் கூட்டுக்களாகவும் இருக்கலாம். தந்திரோபாயக் கூட்டுக்களாகவும் இருக்கலாம்.

இந்த அடிப்படையில் பார்த்தால் தமிழ்த் தேசியப் பேரவையின் எழுச்சி தேவையானது. அது உடனடியாக உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்கு உதவும். புதிய கூட்டின் மூலம் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்குரிய கூடுதலான வாய்ப்புகளை அவர்கள் பெறலாம். அதனால் கிடைக்கும் உற்சாகத்தின் மூலம் மாகாண சபை தேர்தலை நோக்கி அவர்கள் கூட்டாக உழைக்கலாம்.

தமிழ் மக்கள் பேரவையில் ஏற்கனவே கூட்டாக உழைத்த கட்சிகள் அவை. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் இரண்டுபட்டு நின்ற கட்சிகள் அவை. மீண்டும் ஒன்றாகியிருக்கின்றன. அது தான் கட்சி மைய அரசியல். முதலில் ஒன்றாக நிற்கட்டும். மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டட்டும். வாக்குகளைத் திரட்டட்டும். கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளின் பின் தமிழ் மக்கள் பேரவை முழுமையற்ற வடிவத்தில் மறுபிறப்பு எடுத்திருக்கிறது என்றும் சொல்லலாம். இரண்டு மருத்துவர்கள் உட்பட விக்னேஸ்வரன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் இணைந்தால் தான் அது முழுமையான தமிழ் மக்கள் பேரவை.


ஐந்து ஆண்டுகளில் ஒரு தவறை திருத்திக் கொள்ள முன்னணி முன் வந்திருக்கிறது. மணிவண்ணனையும் இதற்குள் இணைத்துக் கொண்டால் முன்னணி தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரிய நம்பிக்கையை விதைக்கும். மணிவண்ணனுக்கும் இடையிலான முரண்பாடுகள் ஏனைய எல்லாம் முரண்பாடுகளையும் விட ஆழமானவை. ஆனால் அரசியலில் நிரந்தரமான முரண்பாடுகள் என்று கிடையாது. நிலையான நலன்கள் தான் உண்டு. மான் கட்சிக்குள் மணிவண்ணனின் தலைமைத்துவத்தை அங்கீகரிப்பதில் முன்னணிக்கு சங்கடங்கள் இருக்கலாம். முன்பு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளை ஏற்றுக் கொள்வதிலும் அவர்களுக்கு அவ்வாறு சங்கடங்கள் இருந்தன. இப்பொழுது அந்தப் புனிதங்களை உடைத்துக் கொண்டு ஒரு கூட்டை உருவாக்க முடியும் என்றால் மணிவண்ணனோடு ஏன் உரையாடக்கூடாது?

மணிவண்ணன் இந்த கூட்டுக்குள் வருவாராக இருந்தால் அது தமிழ் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளை உருவாக்கும். புதிய கூட்டு மேலும் பலமடையும் போது அதைக் குறித்து உற்சாகமான எதிர்பார்ப்புகள் மேலெழும். தமிழரசுக் கட்சி அதன் முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டி வரும்.


உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகளின்படி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நிதானமாக முடிவு எடுத்துத் தான் நடத்தும். அது தொடர்பான முடிவுகளை அவர்கள் எடுப்பதற்கு இடையில் தமிழ் மக்கள் ஒரு பெரிய திரளாக மேலெழ வேண்டும். புதிய கூட்டை உருவாக்கிய பின் கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கும் பின்வரும் கருத்துக்கள் காலப் பொருத்தமானவை ...இந்த இணக்கம் நிரந்தர இணக்கமாக இருக்க வேண்டும். அதனை யாரும் மீறினாலும் அதனைத் தமிழ் மக்கள் தாங்கிக் கொள்ள மாட்டார்கள் .

- நிலாந்தன் -


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும்.




ரிஸபராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம் நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.





கடகராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் உண்டாகலாம்.





சிம்மராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம், நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம்.





விருச்சிகராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். கடன் கட்டுக்குள் இருக்கும்.








தனுசுராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.




மகரராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிரப்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.




கும்பராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும். ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல் ாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும்.




மீனராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்னைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்களிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# NPP புரியாத புதிரா? புரிந்தும் புரியாத பதிலா?

(9ம் பக்கத் தொடர்ச்சி) இவர்களைக் கட்டுப்படுத்தவில்லை. அல்லது இவர்களை பொறுப்புகளில் இருந்து நீக்கவில்லை என்றால் அதனுடைய பாரதூரமான விளைவுகள் NPP ஐயே பாதிக்கும். மக்களுக்கும் அதனால் பாதிப்பே.

சிதறுண்டிருந்த தமிழ்க்கட்சிகளை ஆறு மாதங்களுக்குள் ஒன்றிணைய வைத்த, பிராந்திய அரசியலை வலுவாக்கம் செய்தது NPPயின் நடவடிக்கைகள்தான். அதிலும் சந்திரசேகர் — இளங்குமரன் கூட்டணியே என்பதை NPPயும் அதனுடைய ஆதரவாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

NPPயின் ஆதரவாளர்களும் NPP யும் இதைக் குறித்தெல்லாம் இன்னும் தெளிவாகப் பேசாதிருப்பது ஏன்?

இதேவேளை NPPஇலகுவில் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. அதைப் போல அதனால் இலகுவாக ஆட்சியை நடத்தவும் முடியாது. குறிப்பாக அதிகாரத்துக்கு வந்தபோது நாடு பொருளாதார நெருக்கடிக்குள் (கடன் பொறிக்குள்ளும் சர்வதேச நெருக்கடிகளுக்குள்ளும்) தள்ளப்பட்டிருந்தது. அல்லது சிறைப்பட்டிருந்தது.

இது போதாதென்று இனவாதம் மிகத் தீவிரமாக கட்டமைக்கப்பட்டிருந்தது. அதற்கு இராணுவப் பலமும் சேர்க்கப்பட்டிருந்தது. அதாவது இனமுரணும் அதற்கான இராணுவமும் அதற்கான உளநிலையும் உச்ச நிலைக்கு வளர்க்கப் பட்டிருக்கிறது.

இவற்றுக்கு மத்தியில் தான், இவற்றைச் சீர்ப்படுத்தும் ஆட்சியை NPP நடத்த வேண்டியுள்ளது. இது எளிய விடயமல்ல.

ஆகவே இதையெல்லாம் நாம் எளிதில் மறந்து விடவோ கடந்து விடவோ முடியாது. இருந்தும் தமது தவறுகளுக்கும் பழிகளுக்கும் பரிகாரம் காணாமல், நிவாரணம் தேடாமல் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றவே அனைத்துத் தரப்பும் முயற்சிக்கின்றன.

இது எவ்வளவு பெரிய தவறு? எவ்வளவு பெரிய குற்றம்? ஆனால், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள NPP இதையெல்லாம் புரிந்து கொண்டு வேண்டும். இதற்கு NPPதன்னைத் தெளிவாக முன்னிறுத்துவது அவசியமாகும். தெளிவென்பது, குழப்பங்கள், உள் முரண்பாடுகள் அற்ற நிலையில் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதாகும்.

ஆனால் அதிகாரத்துக்கு NPP வந்த பின்னரான எட்டுமாத கால நடவடிக்கைகளை அவதானிக்கும் போது அப்படித் தெரியவில்லை. அது தடுமாற்றங்களுக்குள்ளாகியிருப்பதாகவே தெரிகிறது. என்பதால் தான் அதற்கு (NPPக்கு) எதிரான சக்திகள் வலுப்பெறக் கூடியதாக உள்ளது. அதன் மீதான விமர்சனங்களும் உள்ளன.

# டக்ளஸ் தோழரும் தேசியவாதிகளும்!

(14ம் பக்கத் தொடர்ச்சி) இன்னும் தமிழர்களின் அரசியலை அறிவுசார் நடவடிக்கையாக மாறாதிருப்பதற்கான முயற்சியாகவே இவை உள்ளன. இவற்றை மீறி ஏழ வேண்டிய பொறுப்பு அரசியற் கட்சிகளுக்கும் அரசியற் தலைவர்களுக்கும் உள்ளது. ஏனென்றால் அரசியல் என்பது ஒரு கற்கை முறை. அது ஒரு பொறுப்புள்ள துறை. மக்களுடைய வாழ்க்கையோடும் அவர்களுடைய எதிர்காலத்தோடும் நேரடியாகச் சம்மந்தப்பட்டது. ஏன், மக்களுடைய வாழ்க்கையையும் அவர்களுடைய நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதே அரசியல்தான். மக்களுடையது மட்டுமல்ல, நாட்டினுடைய நிகழ்காலத்தையும் அதுவே தீர்மானிப்பது. ஆகவே அத்தகைய துறையை. அதற்குரிய அடிப்படைகளோடு அணுக வேண்டும். அதை அறிவுபூர்வமாகக் கையாள வேண்டும். இந்தப் புரிதலோடு அரசியற் கட்சிகளும் அரசியல்தலைவர்களும் செயற்பட வேண்டும். தமிழ்ச் சமூகத்தை அரசியல் ரீதியாக அறிவூட்ட வேண்டும்.

ஆனால், மேற்படி அரசியலைக் குறித்த அறிவூர்வமான சிந்தனையோ, எண்ணமோ தமிழ்ச் சமூகத்திடம் இல்லை. இங்கே காணக் கிடைப்பதெல்லாம் வெறும் உணர்ச்சிகரமான போக்கே. இது அரசியலுக்கு எப்போதும் எதிர் விளைவுகளையே — பாதகத்தையே உண்டாக்கும். என்பதால்தான் தமிழ் மக்களின் அரசியல் தோற்றுப்போகிறது. இலகுவில் தோற்கடிக்கப்படக் கூடியதாக உள்ளது. இதைப் பற்றி குறித்த கட்சிகளின் ஆட்களுக்கே சரியான தெளிவில்லை. என்பதால் தான் துணிச்சலாக எந்த முடிவையும் எடுக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். அந்தத் தடுமாற்றமே அரசியற் கூட்டுகளை உருவாக்குவதில் நெருக்கடிகளையும் இணைந்து செயற்படுவதில் குழப்பங்களையும் உண்டாக்குகிறது.

கட்சிகளுக்கு முண்டு கொடுப்போரின் நிலையும் அதை அனுமதிப்போரின் நிலையும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. இது அனுபவமாகட்டும். ஏனென்றால், ஈழத் தமிழ் அரசியற் தலைவர்கள் உறுப்பினர்களையோ, தொண்டர்களையோ, ஆதரவாளர்களையோ அரசியல் ரீதியாக வளர்த்தெடுக்கவில்லை. அவர்களை மனதிற் கொண்டு ஒரு போதும் தீர்மானங்களை எடுப்பதுமில்லை செயற்படுவதுமில்லை. எல்லாமே ஏகத் தீர்மானம்தான். ஜனநாயக விதிமுறைகளை ஏற்றுப் பதிவு செய்யப்பட்ட அரசியற் கட்சிகளாக இருந்தாலும், தீர்மானங்களை எடுப்பதும் செயற்படுவதும் இராணுவத் தன்மையோடு தான். என்பதால் தான் அரசியற் கூட்டுகள் உருவாகும்போது கட்சிகளுக்குள்ளேயே ஆச்சரியமும் குழப்பமும் ஏற்படுகிறது. அதை விட வெளியே உள்ள அரசியற் சக்திகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அதிர்ச்சி. சமூக வலைத்தளங்களில் இயங்கும் புரட்சியாளர்கள் என்ன செய்வது? என்ன சொல்வது என்று தெரியாத நிலை ஏற்படுகிறது. முக்கியமாக கட்சிக்குள் பேச முடியாததை எல்லாம் சமூக வலைத்தளங்களில் பேசலாம் என்று கருதுகிறார்கள். சமூக வலைத்தளங்களில் உள்ள ஜனநாயக வெளியைப் பயன்படுத்த விளைகிறார்கள். இது அவர்களுக்கு ஒரு விதமான உளத் திருப்தியை அளிக்கிறது.

இந்த நிலை ஏன் வந்தது என்றால், கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழ்த் தேசிய அரசியல் நடைமுறைக்கு (யதார்த்தத்துக்கு) வெளியே நிற்கும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. அதாவது இலட்சியவாத அரசியல் என்ற போர்வையில் கற்பனாவாத அரசியலே மேலோங்கியிருந்தது. யதார்த்தவாத அரசியலை, நடைமுறை அரசியலை எதிர்கொள்ள இது வேறு எங்கும் இல்லாத அளவுக்கு ஈழத் தமிழ் அரசியலில் துரோகி தியாகி என்ற பிரிகோடும் கறுப்பு — வெள்ளை என்ற எதிர் மனோபாவமும் நீடித்து வந்திருக்கிறது.

இதை ஆரம்பித்து வைத்தவர், தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.ஜே. வி. செல்வநாயகம். மட்டக்களப்பில் அரசியல் செல்வாக்கு மிக்கவராக இருந்த நல்லையாவை வீழ்த்துவதற்காகச் செல்வநாயகம் ஆரம்பித்து வைத்த துரோகி என்ற அடையாளப்படுத்தும் ஒதுக்கும் அரசியலை, பின்னர் செம்மையாக வளர்த்தவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். ஆனால், அமிர்தலிங்கமே பின்னாளில் துரோகியாக்கப்பட்டுப் பலியானார். இந்தத் துரோகி தியாகி அரசியல் விளையாட்டு ஐந்து ஆறு தலைமுறையைக் கடந்து இப்பொழுதும் தமிழ் அரசியற் பரப்பில் (24ம் பக்கம் பார்க்க)

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# எலன்மஸ்க் இதை மட்டும் செய்தால் பின் விளைவுகள் மோசமாகும் எச்சரிக்கும் ட்ரம்ப்

தொழிலதிபர் எலான் மஸ்க் உடனான நட்புறவு முற்று பெற்று விட்டது, இந்நிலையில் வெளிப்படையாக ஜனநாயக கட்சியினருக்கு உதவினால் பின்விளைவுகளை எதிர்கொள்வார் என அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார். இதனால் ட்ரம்ப் பின் முன்னாள் நண்பரான மஸ்க், இப்போது அவரது பிரதான எதிரியாக மாறியுள்ளதாக பார்க்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் தொலைபேசி வழியாக அமெரிக்க ஊடக நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார்.

அதில், மஸ்க் உடனான நட்புறவு முற்று பெற்று விட்டதாக நினைக்கிறேன். நான் மற்ற பணிகளை செய்வதில் மிகவும் தீவிரமாக உள்ளேன். ஜனாதிபதி தேர்தலில் நான் மிகப்பெரிய வெற்றியை பெற்றேன். ஆனால் அதற்கு முன்பாகவே அவருக்கு நிறைய சலுகைகள் அளித்தேன். நான் முதல் முறை ஜனாதிபதியாக ஆட்சி பொறுப்பில் இருந்த போதும் இதை செய்தேன். அவரது உயிரை காத்தேன்.

அவருடன் பேசும் எண்ணம் எனக்கு இல்லை. 2026இல் நடைபெறும் இடைத் தேர்தலில் அவர், ஜனநாயக கட்சி உறுப்பினர்களுக்கு ஆதரவு அளித்தால் நிச்சயம் அதற்கான பின் விளைவுகளை எதிர்கொள்வார்" என ட்ரம்ப் கூறியுள்ளார்.

எலன் மஸ்க் இதை மட்டும் செய்தால் பின்விளைவுகள் மோசமாகும்' ட்ரம்ப் இப்போது மஸ்க்கை குறிவைத்துள்ளதாக அமெரிக்காவில் பார்க்கப்படுகிறது. அதை சுட்டும் வகையில் அவரது அண்மைய பேச்சும் இருந்துள்ளது. அரசின் செலவினங்களை குறைக்க மஸ்க்கின் நிறுவனங்களுடனான ஒப்பந்தத்தை இரத்து செய்தால் போதும் என ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடனான மோதலுக்கிடையே, "தி அமெரிக்கன் பார்ட்டி" என்ற புதிய கட்சியை எலான் மஸ்க் அறிவித்துள்ளார். அமெரிக்க அரசு கொண்டு வந்த வரி மற்றும் செலவு மசோதாவால், அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கும் டெஸ்லா நிறுவனரும் ட்ரம்ப்பின் தீவிர ஆதரவாளராக இருந்தவருமான எலான் மஸ்க்குக்கும் இடையிலான நட்புறவில் விரிசல் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக, இருவரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி, பொதுவெளியிலேயே (சமூக ஊடகங்களில்) சண்டையிட்டனர்.



இதனிடையே, 80 சதவிகித நடுத்தர மக்களை பிரதிநிதித்துவப்படுத்த புதிய கட்சி தேவையா? என்று எக்ஸ் தளத்தில் எலான் மஸ்க் கருத்துக் கணிப்பு நடத்தினார். இந்தக் கருத்துக் கணிப்புக்கு 80 சதவிகிதத்தினர் (56.30 இலட்சம் பேர்) 'ஆம்' என்று பதிலளித்தனர். அமெரிக்க மக்களின் இந்த பதில், சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியது. இந்த நிலையில், புதிய கட்சிக்கு 'தி அமெரிக்கன் பார்ட்டி' என்று எலான் மஸ்க் பெயரிட்டு அறிவித்துள்ளார்.

(22ம் பக்கத் தொடர்ச்சி) தொடருவதால் தான் இந்த அதிர்ச்சியும் பரபரப்பும். ஆனாலும் கற்பனாவாதத்தை விட நடைமுறைக்கு யதார்த்தத்துக்கு எப்போதும் வலு அதிகம். என்பதால் தான் 1980 களின் நடுப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி (தமிழரசுக் கட்சி) போன்றவற்றைத் தடை செய்து இல்லாதொழித்த விடுதலைப்புலிகள், 2000த்தின் தொடக்கத்தில் அவற்றை மீளச் சேர்க்க வேண்டி வந்தது. (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) அது புலிகளின் கீழிறக்கமே. அதுவொரு அரசியல் விளைவு. அன்றைய அரசியற் சூழலின் தேவையும் நிர்ப்பந்தமுமாகும். அன்றும் அந்தக் கூட்டில் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில்) இணைந்து கொள்வதற்கும் ஒவ்வொரு கட்சிக்குள்ளும் உணர்ச்சிகரமான பல எதிர்நிலைகள் இருந்தன. அதைப்போல அவற்றை இணைப்பதிலும் புலிகளுக்கும் பலவிதமான உணர்ச்சிகரமான விவாதங்கள் நிகழ்ந்தன. அதையெல்லாம் கடந்தே அந்தக் கூட்டு உருவாகியது. இதையெல்லாம் படிப்பினையாக, வரலாற்று உண்மைகளாக, அரசியல் நடைமுறைகளாக, அரசியல் யதார்த்தமாக ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாகத் தலைவர்கள் தமது தீர்மானங்களிலும் நடவடிக்கைகளிலும் உறுதியும் தெளிவும் கொண்டிருப்பது அவசியம்.

அது இல்லாதபோது தான் குழப்பங்களும் தடுமாற்றங்களும் ஏற்படுகின்றன. இங்கே மிகப் பெரிய சிக்கலாக இருப்பது, தற்போதைய சூழலில் ஈ.பி.டி.பி ஒரு தீர்மானிக்கும் சக்தியாக உள்ளதேயாகும். தமிழ்த்தேசியவாதத் தரப்புகள் இரண்டுக்கும் இப்போது ஈ.பி.டி.பி யின் ஆதரவு வேண்டும். ஆனால், அதைப் பகிரங்கமாகப் பெற முடியாது. இதுதான் பிரச்சினை. கள்ள உறவுக்குத் தயார். அதில் கிடைக்கின்ற இன்பத்தையும் சுகத்தையும் இலாபமாக அனுபவிக்கத் தயார். ஆனால், அதைப் பகிரங்கப்படுத்தத் தயாரில்லை. இந்தக் கேவலமான சிந்தனையை என்னவென்று சொல்வது? அப்படியென்றால், பேசாமல் விடுங்கள். NPP ஆட்சியமைக்கட்டும். அதாவது எதிர்த்தரப்பு ஆட்சியை அமைத்துக் கொள்ளட்டும். இங்கே தான் சிக்கல்.

ஆனால், ஈ.பி.டி.பியின் தரப்பில் ஒரு நியாயம் சொல்லப்படுகிறது. தாம் தற்போதைய சூழலில் தமிழ்ச்சமூகமாக தமிழ்த் தரப்பாகவே சிந்திக்கிறோம். அந்த அடிப்படையில் தான் ஆதரவைக் கொடுப்பதா இல்லையா என்று பேச முடியும் என. அதாவது, NPP க்கு எதிரான தரப்புகளாகிய தமிழ்த் தரப்புகள் எல்லாம் ஒன்றாக நிற்பதாக ஒரு தோற்றத்தை ஒரு நிலையை உருவாக்குவதாக. அப்படியானால் எதற்காக தமிழரசுக் கட்சியும் அதனுடைய ஆதரவாளர்களும் தமிழ்த்தேசியப் பேரவையும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியும் அவற்றின் ஆதரவாளர்களும் பதற்றமடைய வேண்டும். இந்த நியாயத்தைப் பொதுவெளியில் சொல்லி நிமிரலாமே!

